


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524
















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1588 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 11, 2026

## ஒன்ராறியோவின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டுத் துறைக்கான இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் நியமனம்!



சமீபத்திய அமைச்சரவை மாற்றத்தில், ஒன்ராறியோ மாகாணத்தின் முதல்வர் மாண்புமிகு டக் ஃபோர்டு அவர்கள், மாண்புமிகு அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களை முதன்முறையாக செயற்கை நுண்ணறிவும் அதனை ஏற்றுக்கொள்ளுதலுக்குமான இணை அமைச்சராக நியமித்துள்ளார். இது பொது சேவைக்கான அவரது அர்ப்பணிப்புக்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான அவரது பங்களிப்புக்கும் அளிக்கப்பெற்ற அங்கீகரமாகும். இந்தப் புதிய அமைச்சகம், தொழில்நுட்பமும் செயற்கை நுண்ணறிவும் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகின்றன என்பதையும், நமது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், எதிர்கால சிறந்த வாய்ப்புகளுக்குத் தயாராகவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது

(தொடர்ச்சி 9ம் பக்கம்)



## செப்.25 முதல் 27 வரை நடைபெறவுள்ள "ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா" குழுவினரால் கனடா விமான நிலையத்தில் வரவேற்கப்பட்ட இயக்குனர் கார்த்திக் சுப்புராஜின் "DOROTHY – டோரதி" திரைப்படக் குழுவினர்

இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தலைமையில் கனடா வந்துள்ள "DOROTHY -டோரதி" திரைப்படக் குழுவில் திரைப்படத்தின் கதாநாயகியானநட்சத்திர நடிகை கீர்த்தி சுரேஷ் உட்பட பலர் அடங்குகின்றனர்.

## கனடாவில் நடைபெறும் "உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2026" இல் பங்கேற்க்கவுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன்!



கனடாவின் ரொறன்ரோ மாநகரில், எதிர்வரும் 2026 அக்டோபர் 15 முதல் 18 வரை, அனைத்துலகத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள "உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2026" நிகழ்வில், இந்திய பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் பங்கேற்கவுள்ளார்.

"செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்" என்ற கருப்பொருளில் நடைபெறும் இம்மாநாட்டிற்கு அவர் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். செம்மொழித் தமிழின் தொன்மை, வளமை மற்றும் அறிவுச் சிறப்புகளை உலக அரங்கில் உயர்த்துவதுடன், செய்யறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களின் காலத்தில் தமிழின் பயன்பாடு, ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை இம்மாநாடு உருவாக்கும் என அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உலகெங்கும் வாழும் தமிழர்களின் ஒற்றுமையை வலுப்படுத்தி, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழர்களின் எதிர்காலத்திற்கும் புதிய வழிகளை உருவாக்கும் இம்மாநாடு சிறப்பான வெற்றிபெற வேண்டும் என்றும் அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

13 நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் பங்கேற்கவுள்ள இம்மாநாட்டில், திரு. நயினார் நாகேந்திரன் அவர்களின் வருகை சிறப்புக்குரியதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஊடகத் தொடர்புக்கு: அனைத்துலகத் தமிழர் பேரவை மின்னஞ்சல்: **admin@tamilfederation.org** இணையதளம்: **www.globaltamilconference.org**









# Medcentre Health

Synchronizing Health Sectors

# Medcentre Family Clinic

## ACCEPTING NEW PATIENTS

# புதிய நோயாளர்கள்

## ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்

## Dr. விஜிதா முகுந்தன் MD, CCFP

கனடாவில் மருத்துவப்பயிற்சி பெற்று 7 ஆண்டு கனடாவில் குடும்ப மருத்துவராக பணியாற்றியவர்.

## அழையுங்கள் : 416-297-7777

**எமது மருத்துவ நிலையம் தினமும் திறந்திருக்கும்**

## எமது சேவைகள்

**Medcentre Family Clinic**
Comprehensive Care
Patient-Centred Care
For Children, Adults & Seniors
416-297-7777

**Medcentre Urgent Care**
Urgent Care Centre
Walk-In Clinic
Life Lab Collection Centre
416-297-7777

**Medcentre Pharmacy**
Same-day Home delivery
All Insurances Accepted
Pharmacist Consultation
416-609-3333

**Medcentre Women's Health Care**
Cancer Screening (Cervical & Breast)
Family Planning (Contraception)
Sexually Transmitted Infections (STI)
416-331-8888

2225 Markham Road, Ground Floor, Scarborough, ON M1B 2W4

## (Markham Rd. & Finch Ave.E)

medcentrehealth.com

உதயன் கதிரோட்டம்

# தேசத்தின் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் "அரசியல்" செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா?

ஒரு தேசத்தில் இயற்கையாகவோ அன்றி படைப்பாகவோ குவிந்து கிடக்கும் கடல் வளம் மற்றும் கனிம வளம் ஆகியவை அந்தந்த தேசத்தின் அரசுக்கும் மக்களுக்குமே சொந்தமானவை. ஆனால் இவை பற்றி எதுவும் அக்கறை கொள்ளாத பொதுமக்களில் பெரும்பகுதியினர் வாழ்க்கையில் கஸ்டங்களை அனுபவித்தாலும் இவ்வாறான கனிமக் கொள்ளை அல்லது கடல்வளத்தை சூறையாடுவது போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவது இல்லை.

அதற்கு மேலாக, இயற்கையின் கொடையாகவும் அதன் படைப்பாகவும் விளங்கும் மீன்கள் மற்றும் கடல் உணவுப்பொருட்கள் ஆகிய கடல்வளம் மற்றும் தங்கம், வெள்ளி, உருக்கு, நிலக்கரி வேறு உலோகங்கள் தயாரிக்கக் கூடிய இன்னோரென்ன கனிமங்கள் உலகின் பல நாடுகளிலும் நிறைந்து கிடக்கின்றன.இவ்வாறு தான் கடல் வளமும். ஏழை மீனவர்கள் கடலுக்குச் சென்று தங்கள் உயிர்களை பணயம் வைத்து மீன்களை பிடித்து வர "எம்மூரின்" சம்மாட்டிகள் எனப்படும் "முதலாளிகள்" அவற்றின் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொண்டு செல்வந்தர்களாக உயர்ந்து சமூக அந்தஸ்த்தையும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

குறிப்பாக தென்னாபிரிக்கா. நைஜீரியா மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றில் தாராளமாக கனிம வளங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஆனால் இவை பற்றி அந்தந்த நாடுகளில் வாழும் சாதாரண மக்களோ அன்றி ஆர்வம் குறைந்தவர்களோ கவலைப்படுவதில்லை. இதனால் அந்தந்த நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் கனிம வளங்கள் தொடர்பாகவோ அன்றி சட்டங்கள் தொடர்பாகவோ நன்கு அறிந்து வைத்திருப்பார்கள். குறிப்பாக ஆபிரிக்க நாடுகள் பல விலையுயர்ந்த கனிம வளங்களைக் தம்மகத்தே கொண்டிருந்தாலும் அவைபற்றிய வர்த்தக வாய்ப்புக்கள் பற்றிய ஆர்வம் கொண்டட பிறநாட்டு செல்வந்தர்கள் அல்லது பல்தேசிய நிறுவனங்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகளையும் அரசாங்க அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஏதோ வகையில் தொடர்பு கொண்டு நெருக்கமான உறவுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் செய்து அந்தந்த நாடுகளில் உள்ள கனிம வளங்களை அகழ்ந்து எடுக்கும் பாரிய திட்டங்களை தங்கள் கைகளுக்குள் எடுத்து அந்த நாட்டின் சாதாரண மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சலுகைகள் அல்லது பயன் ஆகியவற்றை மறைத்து பிறநாட்டவர்கள் அதன் அதிக பலன்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அந்தந்த நாடுகளின் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இதனால் கிடைக்கும் பெரும் நிதியைக் கொண்டு தங்களை செல்வந்தர்களாக உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்வாறு ஒரு நாட்டில் நூறு பேர் இந்த மோசடிகளுக்கு பக்கத்துணையாக இருந்து சமூகத்தில் பணபலம் உள்ளவர்களாக உயரத்தை எட்டுகின்றார்கள். ஆனால் அந்த நாட்டின் ஏழை அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் தொடர்ந்து ஏழைகளாகவே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள சாதாரண மக்கள் வாழ்க்கையின் அடிமட்டத்திலேயே எவ்வித வசதியும் இன்றி கஸ்டங்களை அனுபவிக்க, மறுபக்கத்தில் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்யும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறாகவே இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் ஊழல் மற்றும் அதிகார துஸ்பிரயோகம் செய்து தங்கள் அரசியல் பலத்தையும் அதிகார பலத்தையும் பயன்படுத்தி அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றியவர்களாய் வாழ்க்கையை அனுபவிக்கின்றார்கள்.

இதன் காரணமாகவே இம் மாதத்தின் எமது தேசக்குரலில் நாம் இந்த மறைந்து கிடக்கும் கிடக்கும் சட்ட விரோத செயல்களையும் ஊழல் விடயங்களையும் பற்றி எமது வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம். இதனாலேயே வடக்கினதும் கிழக்கினதும் கடல் வளத்தையும் கனிம வளத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இலங்கை வாழ் செல்வந்தர்களுக்கும் செல்வாக்கு உள்ளவர்களுக்கும் மாத்திரம் தானா? என்ற கேள்வியை முன்வைக்கின்றோம்.

நாம் அறிந்த வகையில் இலங்கையிலும் கனிமக் கொள்கை மற்றும் சுரங்க அகழ்வு உரிமங்கள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி தொடர்பான சட்ட திட்டங்கள் பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ன.

முன்னைய மகிந்தாவின் ஆட்சிக் காலத்திலும் பின்னர் கோட்டாபாய ஆட்சியின் காலத்திலும் மற்றுமொரு ஊழல்வாதி நாமல் ராஜபக்ச வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகளை இலங்கைக்கு அழைத்து அதிகளவு நிதியை அவர்களிடமிருந்து பெற்று கோடிக்கணக்கான டாலர்களை சுருட்டிக் கொண்டார் என்பதும் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள்.

இலங்கையில் கனிம ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள், குறிப்பாக புதுப்பிக்க முடியாத கனிம வளங்களை அகழ்ந்தெடுப்பதன் மூலம் ஏற்படும் மீட்டெடுக்க முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் அச்சம் மற்றும் எதிர்ப்புகளை சுட்டிக்காட்டிவரும் பல சமூக ஆர்வலர்களும் அமைப்புக்களும் உள்ள நிலையில் அவர்களை தங்கள் அதிகார பலத்தைப் பாவித்து அடக்கியும் சிறையில் அடைத்தும் அல்லது கொலைப் பயமுறுத்தல் செய்தும் ஊழல்வாதிகள் தங்கள் "திருட்டுக்களை" தொடர்ந்து வருகின்றார்கள்.

சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட நீண்ட காலத்திற்குப் பின்னரும் நிலச்சரிவுகள், விவசாய உற்பத்தித் திறன் இழப்பு, நீர் வளங்கள் வற்றிப்போதல், சுற்றுச்சூழல் அமைப்புகளின் அழிவு மற்றும் பல்வேறு சூழலியல் பாதிப்புகள் போன்ற நீண்டகால விளைவுகளை பாதிக்கப்பட்ட சமூகங்களே சுமக்க வேண்டியு நிலை சாதாரண மக்களுக்கே ஏற்படுகின்றன. பாதுகாப்பான இடங்களில் தங்கள் மாளிகைகளைக் கட்டி வாழும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் இயற்கை அனர்த்தங்களால் ஒருபோதும் பாதிக்கப்படுவதில்லை.இந்தியாவில் சென்னை போன்ற நகரங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். எந்த ஒரு அரசியல்வாதியும் வெள்ளப்பெருக்கால் சிரமங்களை சந்திப்பதில்லை. ஆனால் மக்களைச் சந்திக்க விலை உயர்ந்த வாகனங்களில் அல்லது வானூர்திகளில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு வருவார்கள்.

அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்த கனிம வளக்கொள்ளைகளை தடுக்கும் கனிமக் கொள்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீண்ட உரையாற்றியுள்ளார். அத்துடன் அவர்கள் இந்த விடயம் தொடர்பான அமைச்சரிடம் பல கேள்விகளையும் தொடத்துள்ளார்.

இனிவரும் நாட்களில் நாமும் இந்த விடயம் தொடர்பான விடயங்களில் ஆர்வத்துடன் எமது அவதானிப்பை செலுத்த வேண்டும் என்றும் தேசத்தின் சொத்தை தனி நபர்களும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் "சூறையாடுவதை" தடுக்க போராட வேண்டும் என்றும் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.!

Canada — We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 — Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349 Scarborough, ON M1S 4Z5

Room for Rent

McCowan & 401 அருகில், Luxury 2 Bed, 2 Bath Condo ல் ஒரு தனி அறை with separate bathroom, Aug 1, 2026 முதல் வாடகைக்கு உள்ளது. Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053

வேலை வாய்ப்பு

தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு: 647-669-2739

Basement Apartment for Rent

One-bedroom basement Apartment (Bungalow House) available immediately. All Utilities. included, Separate entrance & one parking spot. Ideal for One person or a couple. A senior citizen lives on the main level. Located near Ellesmere Rd & Orton Park Rd. Please contact for more details. at 416 230 6462

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கோட்டாபயவை கைது செய்வதில் ஏன் அநுர அரசு ஏன் தாமதிக்கின்றது?

## நாடாளுமன்றத்தில் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி





**"செல்வம் அடைக்கலநாதனின் உரைக்கு பதிலளித்த மகிந்த தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அப்படியானால் செல்வம் அடைக்கலநாதன் கடந்த காலங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட ஊழல் மோசடிகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் அதனால் பாதிக்கப்பட்ட பெண்களின் அழுகுரல் ஆகியவற்றுக்கான கர்மவினை எப்போது அவரைத் துரத்தும்" என்றார்.**

"முள்ளிவாய்க்காலில் தமிழ் இனத்தை அழித்தவர்களை, செம்மணி மனிதப் புதைகுழிகளை உருவாக்கியவர்களை, தாய், தந்தையரை நிர்க்கதியாக்கியவர்களைக் கர்மவினை தற்போது துரத்தத் தொடங்கியுள்ளது" என்று தெரிவித்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், "கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதில் ஏன் தாமதம் நிலவுகின்றது?" என்றும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் 9ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புப் பணியாள் தொகுதியினரின் தலைமையதிகாரி (நீக்கல்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: "ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் காணாமல்போனோர், எமது இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி போன்ற விடயங்களில் விசாரணை நடத்தப்பட்டு நியாயம் கிடைக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். ஐ.நா. சபை வெறும் அறிக்கைகளை மட்டும் விடாமல், அதனை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமது மக்கள் உள்ளக விசாரணையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. நீதியான சர்வதேச விசாரணையையே கோருகின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகள் சுமார் 25 ஆண்டுகளாகச் சிறைகளில் வாடுகின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாகப் போராளிகளின் படங்களை வைத்திருந்ததாகக் கூறி கைது செய்யப்பட்ட இளைஞர்களும் இன்றும் சிறையில்தான் உள்ளனர். எங்களுடைய தாய், தந்தை உறவுகளின் மனநிலை எப்படி இருக்கும் என்பது இன்று ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு இப்போது உணர்த்தப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை ராஜபக்ஷக்கள் இல்லாது ஒழித்துள்ளனர் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மனித உரிமை மீறல்கள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குள்ளான சந்தேகநபரான கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதில் ஏன் இந்தத் தாமதம் நிலவுகின்றது என்று தெரியவில்லை? ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

கர்மா என்பதனை நான் நம்புவதில்லை. ஆனால், கர்மா என்பது இருக்கின்றது என்பதனை தற்போது உணர முடிகின்றது. எமது இனத்தை அழித்தொழிக்க நினைத்தவர்கள், செம்மணியில் மக்களைப் புதைத்தபோது அவர்கள் பட்ட வேதனைகள் மற்றும் முள்ளிவாய்க்காலில் தாய், தந்தையின் கண் முன்னே பிள்ளைகள் வீழ்ந்தபோது எழுப்பட்ட அழுகுரல்கள் இன்று கர்மா என்ற ரீதியில் செயற்படத் தொடங்கியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை தனது கருத்துக்களை அழுத்தமாகக் கூறினாலும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான இறுக்கமான வாய்ப்புகளை அது கையாள்வதில்லை. இதனால் ஐ.நா. சபை மீது எமது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை படிப்படியாகச் சிதைவடைந்து செல்கின்றது.

இலங்கை அரசு உள்ளக விசாரணையை நிறுத்திவிட்டு, சர்வதேச விசாரணையை மேற்கொள்ளும் அடிப்படையை உருவாக்க வேண்டும். இந்த அரசு இத்தகைய சரியான செயற்பாடுகளில் ஈடுபடும்போது எமது முழுமையான ஆதரவு வழங்கப்படும்." - என்றார்.

# ஊழல் குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றவர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து பொருளாதார ஆலோசனை கூறுவது வேடிக்கையானது!

## நாமல் ராஜபக்ச என்னும் ஊழல்வாதியை விளாசித் தள்ளிய ஆளுங்கட்சி எம்.பி. சந்தருவன்



மக்களின் வரிப்பணத்தை இலஞ்சமாகப் பெற்றுச் சுகபோக வாழ்க்கையை அனுபவித்தவர்களாகிய சிறையில் உள்ளவர்கள் இன்று நாடாளுமன்றத்துக்கு வந்து அரசுக்குப் பொருளாதார மேம்பாடு பற்றி ஆலோசனை வழங்குவது வேடிக்கையாக உள்ளது என்று தேசிய மக்கள் சக்தியின் அம்பாந் தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தருவன் மதரசிங்ஹ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 8ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "ஊரில் உள்ளவர்கள் ஏதாவது குற்றச்செயலுக்காகச் சிறைக்குச் சென்றால் வெட்கத்தால் வெளியில் வரமாட்டார்கள். பிறருடன் கதைக்கக்கூட மாட்டார்கள். ஆனால், நாடாளுமன்றத்தில் அவ்வாறான நிலைமையைக் காண முடியவில்லை.

ஊழல், மோசடிச் சம்பவங்களுக்காகச் சிறைக்குச் சென்றவர்கள் இன்று நாடாளுமன்றத்துக்குள் வந்து பொருளாதார மேம்பாடு பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். விவசாயிகளுக்கு உரம் இல்லை என்று கூறும் நாமல் ராஜபக்ஷ தான், அன்று கழிவு உரத்தை இறக்குமதி செய்து நாட்டின் விவசாயத்தை அழிக்கும் தீர்மானத்துக்கு ஆதரவாகக் கையுயர்த்தினார்.

அரசியல் பழிவாங்கலுக்காகவே நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன குறிப்பிடுகின்றார்.

எயார்பஸ் கொள்வனவு விவகாரத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆஸ்திரேலியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 100 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போதெல்லாம் அவர்களின் உடல்நலம் குறித்து வெளிநாட்டு மருத்துவமனைகளே அறிக்கை சமர்ப்பிக்கின்றன. நாட்டில் உள்ள அரச மருத்துவக் கட்டமைப்பை வினைத்திறனாக்கும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும்போது இவர்கள் அதற்கு எதிராகச் செயற்படுகின்றார்கள்." - என்றார்.

# நாம் ஏன் வாசிக்க வேண்டும்? வாசிப்பதற்கான 32 காரணங்கள் இதோ!

## உண்ணாத உடல் வளராதது போல, வாசிக்காத மனிதனின் அறிவும் வளர்வதில்லை.



- சிறந்த வாழ்வை அமைத்துக் கொள்ள வாசிப்பே மிக முக்கிய ஆயுதம்.
- வாசிப்பு நம் சொல்வளத்தைப் பெருக்கி, எண்ணத்தின் ஆழத்தையும் நாவடக்கத்தையும் வெளிப்படுத்துகிறது.
- மனித அறிவை வளர்க்கும் இயற்கை உணவு அறிவும் தகவல்களுமே.
- வாசிப்பின் மூலமே நம் சமூகத்தைப் பற்றியும் பிற உலகங்களைப் பற்றியும் முழுமையான புரிதல் கிடைக்கிறது.
- வாசிப்பு நற்பண்புகளையும் ஒழுக்கத்தையும் வளர்த்து, படைப்பாற்றல் மிக்க மனிதனாக நம்மை மாற்றுகிறது.
- நம்முடைய சொந்த கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்தத் தேவையான புதிய சொற்களைத் தருகிறது.
- நாள்பட வாசிக்க வாசிக்க, சூரிய ஒளி போல அது நம் மூளையின் அனைத்துப் பகுதிகளையும் ஒளிரச் செய்கிறது.
- உடலுக்கு உடற்பயிற்சி போல, மூளைக்கு வாசிப்புதான் பயிற்சி.
- தன் விதியைத் தன் கைகளில் எடுக்கும் சக்தியை மனிதனுக்கு அறிவே வழங்குகிறது.
- அறிவே ஆற்றல் அந்த ஆற்றலை ஒரு சுதந்திர மனிதனால் மட்டுமே முழுமையாகப் பெற முடியும்.
- நம் சூழலை மாற்றி அமைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வாசிப்பே கருவி.
- ஒரு புத்தகத்தை வாசிப்பது என்பது, என்றுமே துரோகம் செய்யாத ஒரு உன்னத நண்பனைப் பெறுவதற்குச் சமம்.
- வாசிப்பு ஒரு மறுபிறவி போன்றது ஒரு புத்தகத்தைப் படித்து முடித்த பின் நீங்கள் பழைய நபராக இருப்பதில்லை.
- வாசிப்பு என்பது சுவாசம் போன்றது வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானது.
- கற்றறிந்தவர் உலகை அறிந்து மகிழ்கிறார் முட்டாளோ தன் அறியாமையிலேயே மூழ்கித் திருப்தி கொள்கிறான்.
- உண்ணாத உடல் வளராதது போல, வாசிக்காத மனிதனின் அறிவும் வளர்வதில்லை.
- அறிவு என்பது மனதிற்கு உணவு, அறியாமைக்கு மருந்து, அறிஞர்களின் ஆபரணம், ஆன்மாவை உயர்த்தும் சக்தி.
- எதிர்பாராத அல்லது கடினமான ஒரு முடிவாக இருந்தாலும், ஒரு தெளிவான நிறைவை ஒரு புத்தகம் எப்போதும் தருகிறது.
- உலகத்தைப் பார்க்கும் உங்கள் பார்வைக் கோணத்தை வாசிப்பு பன்மடங்கு விரிவுபடுத்துகிறது.
- நாம் வாழாத பல உன்னத உலகங்களையும் சாத்தியங்களையும் வாசிப்பு நம் கண்முன்னே நிறுத்துகிறது.
- பிறரது முட்டாள்தனங்களை நேரடியாக எதிர்கொள்ளாமல், அவர்களின் அறிவார்ந்த சிந்தனைகளில் உலா வரும் இன்பம் வாசிப்பு.
- மாறிவரும் நவீன உலகில் நாம் அறிவு வறுமைக்கு ஆளாகாமல் இருக்க வாசிப்பு அவசியம்.
- பல நுற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தலைசிறந்த மேதைகளுடன் உரையாடும் அனுபவத்தை வாசிப்பு தருகிறது.
- மனித சிந்தனையின் எல்லைகளை விரிவுபடுத்தி, புதிய புதுமையான யோசனைகளை உருவாக்குகிறது.
- நம்மைச் சுற்றியுள்ளவற்றைப் புரிந்து கொள்ளும்போது, வெளிப்புறக் குழப்பங்கள் நம்மை எளிதில் பாதிப்பதில்லை.
- போலித்தனம் இல்லாத ஒரே இன்பம் வாசிப்பு மட்டுமே பிற இன்பங்கள் மறைந்தாலும் இது என்றும் நிலைக்கும்.
- வாசிப்பை நிறுத்துபவன் 20 வயதிலும் முதியவனே தொடர்ந்து கற்பவன் 80 வயதிலும் இளைஞனே.
- இளமைக் காலக் கனவுகளை நிஜமாக்கும் ஆற்றல் புத்தகங்களுக்கு உண்டு.
- நம் எதிர்காலப் பயணத்திற்கான மிகச் சரியான வழிகாட்டியை வாசிப்பு நமக்கு வரைகிறது.
- வாழ்க்கை எனும் விளையாட்டைச் சரியாக விளையாடுவதற்கான விதிகளைப் புத்தகம் கற்றுக்கொடுக்கிறது.
- கற்பனைத் திறனையும் தொலைநோக்குப் பார்வையையும் வளர்க்கிறது.
- பிரபஞ்சத்தின் ஆழமான ரகசியங்களையும் வாழ்வின் தத்துவங்களையும் உங்கள் கைகளில் தருகிறது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கைக்கு நெருக்கடி வரும்போது இந்தியா உறுதியாகத் துணை நிற்கும்!

## பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதி



இலங்கைத் தீவு நாடு எப்போது நெருக்கடியை எதிர்கொண்டாலும், இந்தியா எப்போதும் உறுதியாக இலங்கையின் பக்கத்தில் நிற்கும் என்று இந்தியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

தனது முதலாவது இலங்கைக்கான விஜயத்தின் போது கொழும்பில் இந்திய வம்சாவளியினருடன் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியாவும் இலங்கையும் நெருங்கிய கலாசார மற்றும் நாகரிகத் தொடர்புகளைப் பகிர்ந்து கொள்வதாகவும், இந்த உறவுகள் இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் இலங்கை அரசின் அமைச்சரவை அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், மேற்கு மாகாண ஆளுநர் ஹனிப் யூசூப், பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தியாவின் சிரேஷ்ட சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் இந்திய சமூகத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்தியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்புத் துறை வளர்ச்சிகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பொருளாதாரம் சுமார் 2 டிரில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து இரட்டிப்பாகி தற்போது சுமார் 4 டிரில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.



உலகளாவிய பொருளாதார சவால்களுக்கு மத்தியில், 2026 - 2027 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியப் பொருளாதாரம் 7.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன், உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் இந்தியா 16 சதவீதத்துக்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகின்றது. கடந்த 12 ஆண்டுகளில் சராசரி பணவீக்கம் சுமார் 4.7 சதவீதமாகக் குறைந்துள்ளது.

இந்தியாவின் பொருள்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி ரூ.45 இலட்சம் கோதியிலிருந்து ரூ.79 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, மின்னணுப் பொருள்கள் மற்றும் கைப்பேசி உற்பத்தித் துறையில் வரலாறு காணாத வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய கைப்பேசி உற்பத்தியாளராக உருவெடுத்துள்ளது. கைப்பேசி ஏற்றுமதி கிட்டத்தட்ட 163 மடங்கு அதிகரித்து ரூ.2.6 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

12 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வெறும் ரூ. 600 கோடி மதிப்பிலான பாதுகாப்பு உபகரணங்களை மட்டுமே ஏற்றுமதி செய்த நிலையில், தற்போது அது வரலாறு காணாத அளவான சுமார் ரூ.39,000 கோடியாக உயர்ந்துள்ளது. 2013 - 2014 நிதியாண்டில் சுமார் ரூ.2 இலட்சம் கோடியாக இருந்த பாதுகாப்பு பட்ஜட், 2025 - 2026 நிதியாண்டில் ரூ.7.25 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் பலனாக சுமார் 25 கோடி இந்தியர்கள் வறுமையின் சுழற்சியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கை 25 கோடியிலிருந்து தற்போது சுமார் 95 கோடியாக அதிகரித்துள்ளது. டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு மற்றும் நேரடி நிதிப் பரிமாற்றம் மூலமாக மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு இதுவரை ரூ.51 இலட்சம் கோடி பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.” - என்றார்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நம்பகத்தன்மை மற்றும் அந்தஸ்து குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்ததற்குப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையே முக்கிய காரணம் என்று குறிப்பிட்ட ராஜ்நாத் சிங், இரு நாடுகளின் மக்களுக்கும் இடையே பாலமாகச் செயற்படும் இந்திய வம்சாவளியினரின் பங்களிப்பையும் பாராட்டினார்.



# வரலாற்றுச் சிறப்புமிக்க நுவரெலியா – சீதாஎலிய சீதையம்மனை வழிபட்டார் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்!



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், 10ம் திகதி அன்று வியாழக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க நுவரெலியா - சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்து விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ஆலயத்துக்கு வருகை தந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சரை, ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றார்.

இந்த வரவேற்பு நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜீவன் தொண்டமான், மஞ்சுல சுரவீர ஆராச்சி, நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் வேலு யோகராஜ் உள்ளிட்ட ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் அனுமான் பாதத்தை தரிசித்ததுடன், புனித கங்கையில் இறங்கி கங்கா தரிசனமும் செய்தார். இதன்போது ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டதுடன், நிர்வாக சபை உறுப்பினர்களுடன் அவர் குழுப் புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

மேலும், இந்திய அரசின் உதவியுடன் இராகலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளின் பயனாளிகள், அமைச்சர் ராஜ்நாத் சிங்கைச் சந்தித்து, இந்திய அரசுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்தனர். அவர்களுடன் அமைச்சர் கலந்துரையாடியதுடன், அவர்களுடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை ஜனாதிபதி அநுர – இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் ஆகியோர் கொழும்பில் நடத்திய முக்கிய சந்திப்பு!

## இலங்கை - இந்தியா இடையே 3 பாதுகாப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு 9ம் திகதி புதன்கிழமை அன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதுடன், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் உத்தியோகபூர்வமாக இந்த நாட்டுக்கு வருகை தந்துள்ளமை 38 ஆண்டுகளுக்குப் பின்னர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் நிலவும் பாதுகாப்பு, பொருளாதாரம், சமுத்திர மற்றும் பிராந்திய பங்களிப்பு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகள் பரஸ்பர நன்மை கிடைக்கும் வகையில் மேலும் வலுப்படுத்தப்படுவது குறித்து இதன்போது ஜனாதிபதிக்கும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கும் இடையில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக, இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தேசியத் திட்டம் குறித்து ஜனாதிபதி இங்கு விளக்கமளித்ததுடன், இந்து சமுத்திர பிராந்தியம் போதைப்பொருள் வர்த்தகங்களின் மையமாக மாறியுள்ளதால், போதைப்பொருட்களை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். மேலும், தற்போது இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள இலங்கை போதைப்பொருள் வர்த்தகர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கை நெருக்கடிகளை எதிர்நோக்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா வழங்கிய ஆதரவை ஜனாதிபதி இதன்போது விசேடமாகப் பாராட்டினார்.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமைதியைப் பாதுகாப்பதற்காக இலங்கையின் தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தேசிய மற்றும் பிராந்தியத் தேவைகளுக்காக இலங்கை தனது முடிவுகளை எடுக்கும்போதும், ஒரு இறையாண்மையுள்ள நாடாக உலகின் பல்வேறு நாடுகளுடன் பல்வேறு ஒப்பந்தங்களில் இணைகின்றபோதும் பிராந்தியத்தின் பாதுகாப்பை கருத்திற்கொண்டே செயற்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மோதல்கள் ஏற்படாதவாறு அதனை அமைதியான பிராந்தியமாகப் பேணுவதற்கு இலங்கை வழங்கும் பங்களிப்பை, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இதன்போது விசேடமாகப் பாராட்டினார்.

மேலும், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்திய இராணுவம் வழங்கிய பங்களிப்பை இதன்போது குறிப்பாகப் பாராட்டிய ஜனாதிபதி, இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் திறன்களை மேம்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் இன்று கைச்சாத்திடப்பட்ட புதிய ஒப்பந்தங்கள் வழிவகுக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

"அயல்நாட்டுக்கு முதலிடம்" என்ற வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கை - இந்தியாவுக்கு மிக முக்கியமானதாகும் எனத் தெரிவித்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தலைமையின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டினார்.

மீனவர் பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை மீனவர்களின் முக்கிய வாழ்வாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இந்தியாவின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வது குறித்தும், இப்பிரச்சினைகளைத் தீர்க்க இரு நாடுகளும் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பின்னர், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கான முக்கிய படியாக, கைச்சாத்திடப்பட்ட மூன்று புதிய ஒப்பந்தங்கள் ஜனாதிபதி மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் முன்னிலையில் பரிமாற்றிக்கொள்ளப்பட்டன.

இலங்கை விமானப் படைக்காக எல். 70 துப்பாக்கிகளின் நவீனமயப் படுத்தல் ஒப்பந்தம், இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் இடையிலான கல்விசார் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் மற்றும் இலங்கை மாணவர் படையணி மற்றும் இந்திய மாணவர் படையணி ஆகியவற்றுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தம் ஆகிய மூன்று ஒப்பந்தங்களும் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் இங்கு பரிமாற்றிக் கொள்ளப்பட்டன.

மேலும், இந்திய அரசின் உதவியுடன் குருநாகல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைக்கப்பட்ட 0 பெய்லி பாலங்களைத் திறந்து வைக்கும் நிகழ்வில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங் ஆகியோர் இணைய வழி ஊடாக கலந்துகொண்டனர்.

டித்வா சூறாவளிக்குப் பின்னர் அத்தியாவசிய வீதிகளை மீளமைப்பதற்காக இந்தியாவினால் வழங்கப்பட்ட புனரமைப்பு உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக, பன்சியகம - குருநாகல், கெபெல்லேவ - குருநாகல் மற்றும் பழுகாமம் - மட்டக்களப்பு ஆகிய பாதைகளில் நிர்மாணிக்கப்பட்ட பெய்லி பாலங்கள் இவ்வாறு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, பாதுகாப்பு அமைச்சின் பதில் செயலாளர் இந்திகா விஜேகுணவர்தன ஆகியோருடன், இந்தியப் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# செம்மணி புதைகுழி மற்றும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு வேண்டி பேரணி!



செம்மணி புதைகுழி விடயம் மற்றும் தமிழர்கழின் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டி பேரணி ஒன்று தமிழ் தேசிய பேரவையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த பேரணிக்கு ஆதரவு கோரும் முகமாக 9ம் திகதி புதன்கிழமை அன்று நல்லூர் பகுதியில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அந்த துண்டுப் பிரசுரத்தில் குறிபிடப்பட்டுள்ளதாவது, செம்மணி சித்துப்பாத்தியில் தமிழ் இனப்படுகொலைக்கான சாட்சியங்களாக சுமார் 600 மனித எலும்புக்கூடுகள் வெளிவந்துள்ளன. குற்றமிழைத்த ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டில் இந்த சான்றுப் பொருட்கள் இருப்பது, ஆதாரங்கள் அழிக்கப்படும் பேராபத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் முழுமையான பொறுப்பில் சர்வதேச தடயவியல் நிபுணர்களைக் கொண்டு செம்மணி உள்ளிட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளதும் அகழ்வாராய்ச்சி மற்றும் விசாரணைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ் அவசரக் கோரிக்கையை வலியுறுத்தியும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழ்த்தேசியப்பேரவை மற்றும் குடிசார் அமைப்புக்கள் இணைந்து நடத்தும் மாபெரும் பேரணிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செப்டம்பர் 13 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் ஆரம்பமாகும் குறித்த ஊர்வலம் கோவில் வீதி வழியாக கிட்டு பூங்கா (சங்கிலியன் பூங்கா) வரை சென்று, அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

**இந்த போராட்டத்தின் முதன்மை கோரிக்கைகளாக**

1. சர்வதேச புதைகுழி விசாரணை: செம்மணி உள்ளிட்ட புதைகுழிகளை UN மேற்பார்வையில் சர்வதேச நிபுணர்கள் அகழ்வு செய்ய வேண்டும்.

2. சுயாதீன சர்வதேச விசாரணை: தமிழ் இனப்படுகொலைக்கு பாரபட்சமற்ற சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்.

3. சர்வதேச பொறுப்புக்கூறல்: சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (ICJ) ஊடாக இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி: உள்ளகப் பொறிமுறைகள் தோல்வியடைந்ததால், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மை அறியும் உரிமை மற்றும் நீதி கிடைக்க சர்வதேச விசாரணை வேண்டும்.


5. அரசியல் கைதிகள் விடுதலை: பயங்கரவாத தடுப்புச் சட்டம் (PTA) உடனடியாக நீக்கப்பட்டு, நீண்டகால அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

6. இராணுவமயமாக்கல் முடிவுக்கு வருக: வடகிழக்கிலிருந்து இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்.

7. நில உரிமை பாதுகாப்பு: தையிட்டி, மயிலிட்டி, பலாலி, வயாவிளான், கேப்பாபிலவு உள்ளிட்ட ஆக்கிரமிக்கப்பட்ட தனியார் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

8. திட்டமிட்ட குடியேற்றத் தடுப்பு: தொல்லியல், வனவளத் துறைகளின் பெயரால் நடக்கும் திட்டமிட்ட இனப்பரம்பல் மாற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

9. பண்பாட்டுரிமை பாதுகாப்பு: தொல்லியல் மற்றும் மதத்தின் பெயரால் தமிழர்களின் மரபுரிமைகளை ஆக்கிரமிப்பதை சர்வதேச கண்காணிப்பு பொறிமுறை மூலம் தடுக்க வேண்டும்.



10. சுயநிர்ணய உரிமை அங்கீகாரம்: ஒற்றையாட்சித் தீர்வுகளை நிராகரித்து, தமிழ்த் தேசம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் நிரந்தர அரசியல் தீர்வு உறுதி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஜனாதிபதி அநுர குமார தலைமையில் கொழும்பில் நடைபெற்ற "அரச இலக்கிய விருது விழா"

## தமிழ் மொழிப் பிரிவில் கவிஞர் (சோ.பா) சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதனுக்கும், ஆங்கில மொழிப் பிரிவில் பேராசிரியர் ஈ.ஏ. காமினி பொன்சேகாவுக்கும் மேற்படி விருதுகள் வழங்கப்பட்டன.







இலங்கை இலக்கியத் துறையைத் தமது உன்னதமான படைப்புகளால் வளப்படுத்திய இலக்கியவாதிகளைக் கௌரவிக்கும் அரச இலக்கிய விருது விழா 2026, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் கழகம் மற்றும் அரச இலக்கியக் குழு ஆகியவை இணைந்து 67ஆவது முறையாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

2025ஆம் ஆண்டில் இலங்கை இலக்கியத் துறைக்குச் சிறந்த பங்களிப்பை வழங்கிய எழுத்தாளர்களைப் பாராட்டி, 50 இற்கும் மேற்பட்ட பிரிவுகளில் அரச விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை இலக்கியத் துறைக்கு உன்னதமான சேவையாற்றியமைக்காக, வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே வழங்கப்படுகின்ற உயரிய "சாஹித்யரத்ன" கௌரவ விருதுகள் மூன்று மொழிப் படைப்பாளிகளுக்கு ஜனாதிபதியால் வழங்கிவைக்கப்பட்டன.

சிங்கள மொழிப் பிரிவில் பராக்கிரம கொடித்துவக்குக்கும், தமிழ் மொழிப் பிரிவில் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதனுக்கும், ஆங்கில மொழிப் பிரிவில் பேராசிரியர் ஈ.ஏ. காமினி பொன்சேகாவுக்கும் மேற்படி விருதுகள் வழங்கப்பட்டன.

இதன்போது 2026ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருதுக்குரிய நூற்தொகுதி, நினைவுமலர் மற்றும் மும்மொழிகளிலான 2026 இலக்கிய இதழ் ஆகியவை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

மகா சங்கத்தினர் உட்பட அனைத்து மதத் தலைவர்கள், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர, கலாசார அலுவல்கள் பணிப்பாளர் கே.எஸ். தில்ஹானி, இலங்கைக் கலைக் கழகத்தின் தலைவர் கீர்த்தி வெலிசரகே, தேசிய இலக்கிய உப கழகத்தின் தலைவர் கமல் பெரேரா ஆகியோருடன், நிபுணர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதியின் செயலாளரை நேரில் சந்தித்து மலையக இந்து குருமார்கள் கலந்துரையாடியதில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேச்சு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயகவுக்கும் இலங்கை மலையக இந்து குருமார்களுக்கும் இடையிலான சந்திப்பு 9ம் திகதி புதன்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

மலையக இந்து குருக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைகள் குறித்து இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மலையகப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களின் நிர்வாக நடவடிக்கைகள், அறநெறிப் பாடசாலைகளை நடத்திச் செல்லல், குருமார்களின் தேவைகள், அத்துடன் ஆலய காணிகள் மற்றும் மதத் தலங்கள் தொடர்பில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இலங்கை மலையக இந்து குருமார்கள் ஒன்றியத்தால் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் அதற்கு அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மலையக இந்து குருமார்கள் வாழும் பகுதிகளிலுள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

இலங்கை மலையக இந்து குருமார் ஒன்றியத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ வேலு சுரேஷ் சர்மா குருக்கள் உள்ளிட்ட இந்து குருமார் ஒன்றியத்தின் மதத் தலைவர்கள், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) கே.பி. யோகசந்திர, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் பொலிஸ்) எம்.எஸ்.பி. சூரியப்பெரும, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.கே. நிஹால், இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை. அனிருத்தனன் உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் தாமதம்: தெரிவுக்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்த எதிரணி



மாகாண சபைத் தேர்தல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் 10ஆவது கூட்டத்தை நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10-09-2026 அன்று புறக்கணித்தனர்.

நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான தீவிரத்தையும் அவசரத்தையும் தெரிவுக்குழு வெளிப்படுத்தத் தவறி வருவதால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், சாணக்கியன் இராசமாணிக்கம் மற்றும் நிஷாம் காரியப்பர் ஆகிய நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் தமது கடுமையான கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்றைய கூட்டத்தில், நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பில் சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பி., பத்து கூட்டங்கள் நடைபெற்றுள்ள போதிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அர்த்தமுள்ள முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதால், இத்தகைய செயன்முறைக்கு இனியும் ஆதரவளிக்க முடியாது எனத் தெரிவுக்குழுவிடம் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடைமுறைத் தீர்வுகள் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தெளிவான முன்மொழிவொன்றை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே முன்வைத்துள்ளது. அதில் பெண்களுக்கு 25 சதவீத உத்தரவாத பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான ஏற்பாடும் உள்ளடங்கியுள்ளது.

அதேவேளை, மற்றுமொரு சட்ட ரீதியான வழிமுறையும் நாடாளுமன்றத்தின் முன் உள்ளது. சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பியால் முன்வைக்கப்பட்ட தனியார் உறுப்பினர் சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ளது. பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணங்கினால், அந்தச் சட்டமூலத்தை முன்னெடுத்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை உருவாக்க முடியும்.

எனவே, தேர்தலை நடத்துவதற்கான நடைமுறை மற்றும் சட்டரீதியான தெரிவுகள் ஏற்கனவே நாடாளுமன்றத்தின் முன் உள்ளன. இனிமேல் தேவையானது மேலும் செயன்முறைகளை நீடிப்பதல்ல. அரசியல் தீர்மானத்தை மேற்கொண்டு தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே ஆகும்.

தேசிய மக்கள் சக்தி தனது 2024 ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்துக்குள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதாகத் தெளிவாக உறுதியளித்திருந்தது. இந்த உறுதிமொழி விஞ்ஞாபனத்தின் 128ஆவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் பல ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகளின்றி இயங்கி வருகின்றன. இதன் மூலம் தமது பிரதிநிதிகளை ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யும் மக்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர அனுமதிக்க முடியாது.

எனவே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தெளிவான காலவரையறையுடன் கூடிய நடவடிக்கைகளை அரசும் தெரிவுக்குழுவும் உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

தெரிவுக்குழு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தீவிரமான அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தத் தவறினால், நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மிகவும் தீவிரமானதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அந்தத் தீர்மானம் என்னவென்பதை இவ்வேளையில் வெளிப்படுத்த விரும்பவில்லை என்று சாணக்கியன் இராசமாணிக்கம் எம்.பி. மேலும் கூறினார்.



# மீண்டும் ஒரு ஐ.நா கூட்டத் தொடர்!

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தீவு இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2009 மே 18க்குப் பின், அப்போது இருந்த ஐநா பொதுச் செயலாளர் கொழும்புக்கு வருகை தந்தபோது, அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். கடந்த 17 ஆண்டுகளிலும் ராஜபக்சக்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, அனுர குமார...யாருமே பொறுப்புக்கூறவில்லை என்பதுதான் உண்மை.**

ஐநாவின் 63ஆவது கூட்டத் தொடர் கடந்த 7 ஆம் தேதி தொடங்கியது. தொடரை முன்னிட்டு கடந்த மூன்றாம் திகதி வெளியிடப்பட்ட மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.. "அனைத்துத் தரப்பினராலும் இழைக்கப்பட்ட சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்கள், பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடுமையாக மீறப்பட்டமை ஆகியன எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை அவற்றுக்கு பொறுப்பு கூறப்படவும்" இல்லை.

மேற்கண்ட அறிக்கை வெளியிடப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, உலகப் பொது நிறுவனங்களில் ஒன்றாகிய மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் (Human Rights watch) அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது. அரசாங்கம் "நீதியின் விடயத்தில் நேர்மையாக இல்லை" என்று. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நாட்டின் மிக மோசமான பல வழக்குகளை மீண்டும் திறந்துள்ளது. எனினும் அந்த வழக்குகளை இன்றுவரை முடிக்கவில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட அறிக்கைகள் நமக்கு எதனை உணர்த்துகின்றன? கடந்த 17 ஆண்டுகளாக இலங்கைத் தீவு இறந்த காலத்துக்குப் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2009 மே 18க்குப் பின், அப்போது இருந்த ஐநா பொதுச் செயலாளர் கொழும்புக்கு வருகை தந்தபோது, அப்போது இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவில்லை என்பதைத்தான். கடந்த 17 ஆண்டுகளிலும் ராஜபக்சக்கள் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறிசேன, அனுர குமார...யாருமே பொறுப்புக்கூறவில்லை என்பதுதான் உண்மை.

குறிப்பாக 2015இல் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஆதரவோடு நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தின் பின், அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் இன்றுவரை பொறுப்பு கூறவில்லை. இதை இன்னும் விரிவாகச் சொன்னால் அந்த தீர்மானமானது பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலை மாறுகால நீதிக்கானது. அந்தத் தீர்மானத்தை அப்போது இருந்த மைத்திரி-ரணில் அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொண்டது. தான் இணை அனுசரணை வழங்கிய ஒரு தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த சுமார் 11 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் கடந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் பொறுப்புக் கூறவில்லை. இதை இன்னும் ஆழமான கோட்பாட்டு வார்த்தைகளில் சொன்னால், கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துலக சமூகத்துடன் தான் ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் தொடர்ச்சியாக வந்த எந்த ஓர் இலங்கை அரசாங்கமும் பொறுப்புக் கூறவில்லை.

இது ஒரு ராஜபக்ச குடும்பத்தின் அல்லது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அல்லது அனுர குமாரவின் தனிப்பட்ட பொறுப்புக் கூறாமை அல்ல. இது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் பொறுப்புக் கூறாமை. அவ்வாறு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பைப் பொறுப்புக் கூற வைப்பதில் ஐநா கடந்த 17 ஆண்டுகளாக அதிலும் குறிப்பாக, 2015 நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னரான 11 ஆண்டுகளில் பின்னடைவைக் கண்டுள்ளது என்பதுதான் உண்மை.

நிலைமாறு கால நீதியின் தமிழ்ப்பங்காளியாகிய சுமந்திரன் கடந்த 2021ஆம் ஆண்டு, வவுனியாவில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறியதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அந்தக் கூட்டம் அப்பொழுது நடக்கவிருந்த ஐநா மனித உரிமைகள் கூட்டத்தொடரை முன்னிட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டுக் கடிதம் ஒன்றைத் தயாரிக்கும் நோக்கத்தோடு கூட்டப்பட்ட இரண்டாவது கூட்டம் ஆகும். அந்தக் கூட்டத்தில் சுமந்திரன் கூறினார் "6 ஆண்டுகளாக ஒரு பரிசோதனை செய்தோம், அதில் தோல்வி அடைந்து விட்டோம்" என்று. அந்த பரிசோதனைதான் நிலைமாறு கால நீதியாகும். அதாவது நிலை மாறு கால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரன் அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனை என்று கூறினார்.

நிலை மாறுகால நீதி இலங்கைத் தீவில் தோல்வியுற்ற ஒரு பரிசோதனை என்பதற்கு அதைவிட வேறு கூர்மையான உதாரணங்களைக் கூறலாம். முதலாவது உதாரணம், நிலைமாறு கால நீதியின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன 3 ஆண்டுகளில் தன் குழந்தையைக் காட்டிக் கொடுத்தார். அவர் ராஜபக்ஷங்களோடு இணைந்து ஒரு யாப்புச் சதி முயற்சியில் ஈடுபட்டார். அதாவது இலங்கைத் தீவை பொறுப்புக்கூற வைப்பதற்கான செயற்பாடுகளின் பிரதான பங்காளியாகிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கினார். அனைத்துலக சமூகம் ஒன்றுக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளை தானே விழுங்கி நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார். இது முதலாவது உதாரணம்.

அடுத்த உதாரணம் ஈஸ்டர் குண்டு வெடிப்பு. ஈஸ்டர் குண்டு வெடிப்பானது நிலைமாறு கால நீதியின் தோல்வியின் விளைவு எனலாம். நிலை மாறுகால நீதி செய்முறைகள் நாட்டில் அமுலில் இருந்த ஒரு காலகட்டத்தில் தான் ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. எனவே நிலைமாறு கால நீதியின் இயலாமையை தோல்வியை அந்த குண்டு வெடிப்புகள் ரத்தம் சிந்தி நிரூபித்தன.

நான்காவது உதாரணம், மிகவும் பிந்தியது; இப்பொழுது நடந்து கொண்டிருப்பது. இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தைச் புதுப்பிக்க முயற்சிக்கின்றது. அந்த அடிப்படையில் "பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைக் காப்பாற்றும்" சட்டமூலம் கடந்த மாதம் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது. நாட்டை பயங்கரவாதத்தில் இருந்து விடுவித்து விட்டதாகக் கூறும் அரசாங்கங்கள் எதற்காக தொடர்ந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும்? நிலைமாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றால் பிறகு எதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டம்? நிலைமாறு கால நீதியின் ஆகப் பிந்திய தோல்வி அது.

மேற்கண்ட நான்கு உதாரணங்களும் ஐநாவின் இலங்கையைப் பொறுப்புக் கூற வைப்பதற்கான திட்டம் தோல்வி அடைந்ததைக் காட்டுகின்றன. அதற்குப் பொறுப்பு, இலங்கைத் தீவின் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பு மட்டுமல்ல. அதைவிட முக்கியமாக ஐநாவும்தான். ஏனென்றால் நிலைமாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில் நிலைமாறு கால நீதியை ஸ்தாபிக்க முயன்றமைதான் அந்தத் தவறுக்கு அடிப்படைக் காரணம்.

தென்னாபிரிக்காவில் நிலைமாற்றம் ஏற்பட்டிருந்தது. அங்கே பெரும்பான்மை கருப்பின மக்களுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தது. அந்த நிலை மாற்றத்தின் பின்னணியில் அங்கே நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒப்பீட்டளவில் வெற்றி பெற்றன. ஆனால் இலங்கைத் தீவிலோ போரில் விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதை வைத்துக்கொண்டு அதனை ஒரு நிலை மாற்றமாக எடுத்துக்கொண்டு, ஐநா நிலைமாறு கால நீதியை இலங்கைக்கு பரிந்துரைத்தது. ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்ததை நிலைமாற்றம் என்று ஐநா ஏற்று கொண்டதா? ஆயுதப் போராட்டம் எனப்படுவது ஒரு மூல காரணம் அல்ல. அது விளைவு. இன ஒடுக்கு முறையின் விளைவுதான். 2009 இல் தோற்கடிக்கப்பட்டது விளைவுதான். மூல காரணம் அல்ல.மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், மைத்திரிபால சிறிசேன அதற்குப் பயந்து அப்பத்தைச் சாப்பிட்டுவிட்டு நிலைமாறு கால நீதியைக் காட்டிக் கொடுத்தார்.

மூல காரணம் அப்படியே மாறாமல் இருந்த காரணத்தால்தான், ஈஸ்டர் குண்டுகள் வெடித்தன. அந்தக் குண்டு வெடிப்பின் பின்னரான உணர்ச்சிகரமான அரசியல் சூழலில், ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முடிந்தது.

மூல காரணம் அப்படியே உள்ளபடியால்தான், பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் புதுப்பிக்க வேண்டிய தேவை வந்தது. புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உருவாக்க வேண்டி வந்தது. மாற்றத்தை வாக்களித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியாலும் அந்த மூல காரணத்தை மாற்ற முடியவில்லை என்பதை அது காட்டுகிறது.

இவ்வாறு மூல காரணம் அப்படியே இருக்கத்தக்கதாக, விளைவின் தோல்வியை வைத்துக்கொண்டு, நாட்டில் நிலை மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கணித்தமை ஐநாவின் தவறு.இது ஐநா அதாவது அனைத்துலக சமூகம் தெரியாமல் செய்த தவறு அல்ல. தெரிந்து செய்த தவறு.தமிழ் மக்களுக்கு அவர்கள் தரக்கூடிய நீதியின் வரையறையை உணர்த்துவது அது.

எனவே இப்பொழுது ஐநா மனித உரிமைச் செயலாளருடைய அறிக்கைகளும் சரி, ஏனைய அனைத்துலக நிறுவனங்களின் அறிக்கைகளும் சரி, சுட்டிக்காட்டுகின்ற போதாமைகள், தவறுகள், பின்னடைவுகள் போன்றவற்றுக்கு ஐநாவும் உட்பட உலக சமூகமும் பொறுப்பு.

இந்தப் பொறுப்பின்மைக்கு பலியாடுகள் ஆக்கப்படுவது தமிழ் மக்கள்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த சுமார் இரண்டு ஆண்டு கால பகுதிக்குள் ஊழல் முறைகேடு போன்ற குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தை ஐநா, மனித உரிமைகள் காப்பகம் போன்றன ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் யார் யாருக்கு எதிராக, என்னென்ன குற்றங்களுக்கு எதிராக, வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தொகுத்துப் பார்த்தால், அவற்றில் பெரும்பாலானவை இன முரண்பாடு சம்பந்தப்படாத வழக்குகள்தான். அதாவது இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் கை வைக்கவில்லை. இந்த விடயத்தில் அவர்களிடம் ஓர் அரசியல் தெரிவு உண்டு. அந்தத் தெரிவுதான் இனவாதம். ஆனால் அண்மையில் பேருவளையில் மக்களை சந்தித்தபோது ஜனாதிபதி என்ன கூறினார் தெரியுமா? இலங்கைத் தீவின் நவீன வரலாற்றிலேயே இனவாதம் இல்லாத காலம் கடந்த இரண்டு ஆண்டுகள்தான் என்று.

எனவே இதில் ஐநாவும் கூட்டுப் பொறுப்பாளி. நிலைமாறு கால நீதி இலங்கைத் தீவில் தோல்வியடைந்து விட்டது என்பதனை அதன் தமிழ் பங்காளியே கூறிவிட்டார். எனவே இனியும் ஐநா நிலை மாறுகால நீதிச் செய்முறைகளைத் தொடர முடியாது.மாறாக இலங்கை அரசாங்கங்களைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான புதிய ஏற்பாடுகளையும் பொறிமுறைகளையும் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இப்போது ஆட்சியில் இருக்கும் என்.பி.பி அரசாங்கம் உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் போன்றவற்றின் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டிருக்கிறது. இந்த விடயத்தில் நிதி உதவிகளையும் பொறுப்புக்கூறலையும் பிரிக்கப்படவியலாதபடி இணைப்பதற்கு உலக சமூகத்தால் முடியும். ஆனால் அதை அவர்கள் செய்யவில்லை. செய்ய முடியவில்லையா? செய்ய விரும்பவில்லையா?

# கனடாவின் முன்னணி ஊடக நிறுவனங்களான TAMIL ONE TV, S.V MEDIA இணைந்து நடத்திய திறந்த வெளித் தெ(பெ)ருவிழாவான 'MEGA BLAST'




கனடாவில் இயங்கும் "அனைத்துலக தமிழர் பேரவை, உலகத் தொல்காப்பிய மன்றத்தின் கனடா கிளை உட்பட சில அமைப்புக்கள் மக்களைச் சந்திக்கும் நோக்கில் சாவடி அமைத்திருந்தன.

------------------------------------

கனடாவின் முன்னணி ஊடக நிறுவனங்களான TAMIL ONE TV மற்றும் S.V MEDIA ஆகிய நட்பு ஊடகங்களின் பிரமாண்டமான பல்சுவை திறந்த வெளி வீதிப் பெருவிழாவான 'MEGA BLAST' 5ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி இரவு 11.00 மணிவரை நடைபெற்றது.

பல்லின கலாச்சாரத்தை அடையாளமிட்டுக் காட்டிய கலை நிகழ்ச்சிகள் மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் உட்பட அரசியல் தலைவர்களின் உற்சாகமான உரைகள் மற்றும்சுவையான உணவுப் பதார்த்தங்களை வழங்கிய உணவகங்கள்- குளிர்பானங்களை விற்பனை செய்த நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் சாவடிகள் என கனடாவின் முன்னணி ஊடக நிறுவனங்களான TAMIL ONE TV மற்றும் S.V MEDIA இணைந்து நடத்திய திறந்த வெளித் தெ(பெ)ருவிழாவான 'MEGA BLAST' கலந்து கொண்டவர்கள் பேரானந்தத்தில் மூழ்கடித்தது என்றால் மிகையாகாது.

## நூற்றுக்கணக்கான வர்த்தகச் சாவடிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் சாவடிகள்

தமிழகத்திலிருந்து ச.ரி.க.ம.ப இசைப்போட்டியில் வெற்றியாளர்களான பவித்திரா. திப்பு சுசந்திகா மற்றும் சிறிஹரி உட்பட பல பாடக பாடகிகள் இசை மேடையை அலங்கரித்தார்கள். சுமார் 10 மணி நேர பெருவிழாவான இந்த 'MEGA BLAST' தமிழ் வண் அறிவிப்பாளர்களும் முக்கியஸ்த்தர்களுமான தனராஜ் மற்றும் பிரசாந்த் ஆகியோர் களைப்பின்றி தொகுத்து வழங்கினார்.

'MEGA BLAST' இன் இரண்டாவது நாளான 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் கம்பீரமாகத் தொடர்ந்தது. அன்றும் நூற்றுக்கணக்கான சாவடிகள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தன என்பது முக்கியமான தகவலாகும். அன்றும் TAMIL ONE TV மற்றும் S.V MEDIA ஆகிய நட்பு ஊடகங்களின் தலைவர் ஸ்ரீ அவர்கள் மற்றும் சாமி அப்பாத்துரை அவர்கள் மேடையில் தோன்றி இந்த 'MEGA BLAST' தமிழ் வண் அறிவிப்பாளர்களும் முக்கியஸ்த்தர்களுமான தனராஜ் மற்றும் பிரசாந்த் ஆகியோரும் இணைந்து இறுதிவரை விழாவை சிறப்பாக நடத்திச் சென்று இறுதியில் நன்றி உரைக்கும் வேளையில் உற்சாகமும் உருக்கமும் கலந்த உணர்வைப் பகிர்ந்து கொண்டு விடைபெற்றனர்.

அத்துடன் அன்று இரவு 10.00 மணியளவில் நிறைவுற்ற 'MEGA BLAST வை கண்டு களித்து விடைபெற்ற ரசிகர்கள் சென்ற பின்னர் அனைத்து தொண்டர்களும் ஒன்றாக இணைந்து பிரதான வீதியான செப்பர்ட் வீதியை சுத்தம் செய்து தடைகளை அகற்றி மாநகரசபை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இங்கே கா ணப்படும் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

*- சத்தியன்*


















# ஒன்றாறியோவின் முதலாவது செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டுத் துறைக்கான இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் நியமனம்



சமீபத்திய அமைச்சரவை மாற்றத்தில், ஒன்றாறியோ மாகாணத்தின் முதல்வர் மாண்புமிகு டக் ஃபோர்டு அவர்கள், மாண்புமிகு அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்களை முதன்முறையாக செயற்கை நுண்ணறிவும் அதனை ஏற்றுக்கொள்ளுதலுக்குமான இணை அமைச்சராக நியமித்துள்ளார். இது பொது சேவைக்கான அவரது அர்ப்பணிப்புக்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான அவரது பங்களிப்புக்கும் அளிக்கப்பெற்ற அங்கீகாரமாகும். இந்தப் புதிய அமைச்சகம், தொழில்நுட்பமும் செயற்கை நுண்ணறிவும் எவ்வளவு வேகமாக வளர்ந்து வருகின்றன என்பதையும், நமது பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், எதிர்கால சிறந்த வாய்ப்புகளுக்குத் தயாராகவும் ஒன்றாறியோவுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவர்கள் தேவை என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் 2018ஆம் ஆண்டில் இருந்து மூன்றாவது முறையாக ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் தொகுதியின் ஒன்றாறியோ சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி வருவதுடன், மேலும் 2023ஆம் ஆண்டில் ஒன்றாறியோவில் அமைச்சரவைப் பதவியை வகித்த முதல் தமிழ் அரசியல்வாதி என்ற வரலாற்றையும் படைத்தார். உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் வான்புகழ் திருக்குறளின் மீது மீண்டும் ஒருமுறை பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் மூலம் அவர், தனது தமிழ் மரபுடனான அவரின் ஆழமான தொடர்பையும் வெளிப்படுத்தியிருந்தார்.



அவர் முன்னதாக 2023ஆம் ஆண்டில் போக்குவரத்துக்கான இணை அமைச்சராகவும், 2024ஆம் ஆண்டில் வீட்டுவசதிக்கான இணை அமைச்சராகவும், சமீபத்தில் சுகதாரா இணை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். அவரது குறிப்பிடத்தக்க சாதனைகளில், 2023-இல் போக்குவரத்துத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்ட "ஒற்றைக் கட்டண" (One Fare) திட்டம், ஸ்காபரோவில் முதன்முதலாக அமைக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி, வீடின்மை, போதைப் பயன்பாடு அல்லது உளநல சவால்களை எதிர்கொள்பவர்களுக்கு ஆதரவும் சிகிச்சையும் அளிக்கும் வகையில் "வீடின்மை மற்றும் போதை பயன்பாட்டில் சிக்கியோருக்கான மீட்பு சிகிச்சை மையங்களை" (HART Hubs) அமைத்தது போன்றன குறிப்பிட்டதக்கன.

செயற்கை நுண்ணறிவு தொடர்ந்து நவீனமடைந்து பல ஒன்றாறியோவாசிகளின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால், செயற்கை நுண்ணறிவுத் துறையில் புதிய வாய்ப்புகளைப் பெறவும், பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கவும், மாறிவரும் உலகளாவிய சூழலில் போட்டித்தன்மையுடன் இருக்கவும், உரிய கட்டுப்பாட்டு வழிமுறைகளை வகுப்பதிலும், ஒன்றாறியோவவின் வளர்ச்சிக்கு உதவுவதில் விஜய் தணிகாசலம் அவர்கள் தலைமைத்துவம் இன்றியமையாததாக அமையும்.

***- UTHAYAN LJI Journalist Ganesh -***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# "தமிழரசு" பொறுப்பேற்று ஒன்றரை வருடமாக மக்களுக்கு சேவையாற்றாத நிலையில் நிர்வாகத்தை தம்மிடம் ஒப்படைக்கும்படி தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கோரிக்கை!

மட்டக்களப்பு மாநகரசபை தமிழரசு கட்சி பொறுப்பேற்று ஒன்றரை வருடமாகியும் கருவறை தொடக்கம் கல்லறை வரை என்ற பழமொழி கமைய மாநகர சபையின் செயற்பாடுகள் எதுவும் செய்யவில்லை எனவே மாநகர சபை வழி நடத்த முடியாவிட்டால் எங்களிடம் ஒப்படைக்கவும் என தேசிய மக்கள் சக்தி மாநகரசபை உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாநகரசபையின் 17வது சபை அமர்வு 10ம் திகதி அன்று வியாழக்கிழமை மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்றது இதன் பின்னர் மாநகரசபையின் எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களான முத்துலிங்கம் துதீஸ்வரன், முனுசாமி உதயராஜ், பிரேம்குமார், ஜெம்ஸ், லதீப் ஆகியோர் ஒன்றிணைந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

"இன்று மாநகர சபையின் 17வது சபை அமர்வு இடம்பெற்றுள்ளது இந்த மாநகர சபை ஆட்சியை தமிழரசு கட்சி பொறுப்பேற்று ஒன்றரை வருடமாக இந்த முதல்வருடன் எதிர்கட்சி இல்லாமல் அனைத்து வேலைகளுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கி வந்தோம்.

இருந்தபோதும் கருவறை தொடங்கி கல்லறை வரை என்ற பழமொழி கமைய மாநகரசபையின் செயற்பாடுகள் எதவுமே செயல்படுத்தப்படவில்லை நீங்களும் சபையில் இருக்கின்றீர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா என மக்கள் கடும் விசனங்கள் தெரிவித்து வருகின்றனர்.

மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் வீதிகள், கழிவகற்றல், வீதி மின்விளக்கு, வடிகான் பிரச்சனை உட்பட பிரச்சனைகளை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்றோம் அனால் எதுலும் நடை முறைப்படுத்தப்படவில்லை இன்று எமது மாநகரசபை எல்லையான திருகோணமலை வீதியிலுள்ள லங்காமாதா ஆலையத்தில் இருந்து காத்தான்குடி வரைக்கும் எந்தவொரு மின்விளக்கும் ஒளிர்வதில்லை இதற்கான காரணத்தை கேட்டால் தினம் தினம் ஒவ்வொரு காரணங்களை சொல்கின்றார்.

இந்த வீதி மின்விளக்கு ஒளிராததால் இன்று வீதி விபத்துக்கள் மற்றும் பல அசம்பாவிதங்கள் இடம்பெற்று வருகின்றன. கட்டாகாலி மாடுகள் தொல்லை தொடர்பாக எதுவும் நடைபெறவில்லை.

இந்த மாநகர சபை அமர்வில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோது எதுவும் முற்றுப் பெறவில்லை கடந்த வருடம் மாநகர சபை உட்பட்ட பிரதேசங்கள் பல மழை வெள்ளத்தில் மூழ்கியது காரணம் வடிகான்கள் துப்பரவு செய்யவில்லை இது தொடர்பாக கடந்த காலத்தில் முதல்வரிடம் பலமுறை தெரிவித்தோம் பயனில்லை.



இந்த வருடம் மாநகரசபை பகுதிகளில் உள்ள பிரதேசம் பல மழை வெள்ளத்தில் மூழ்கப் போகிறது எனவே மழை வெள்ளத்தால் தாண்டால் அதற்கான முழு பொறுப்பும் முதல்வர் எடுக்க வேண்டும்.

மட்டு மாநகர சபைக்கு சொந்தமான மஞ்சம் தொடுவாய் பிரதேசம் அதனை காத்தான்குடி நகரசபை அத்துமீறி அபகரித்து வருகிறது இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவித்து இதுவரை ஒன்றும் செய்யவில்லை இல்லை.

அவ்வாறே பணம் படைத்தவர்கள் காணிகளை பிடித்து பயஅடைத்துள்ளனர் ஏழைகள் துன்பப்படுகின்றனர். குறுக்க வீதிகள் 10 அடி அகலம் கொண்டதாக நில அளவீடு செய்திருந்த போதும் பணம் உள்ளவர்கள் அதை அபகரித்துள்ளனர் இதனால் அந்த வீதியில் உள்ள ஏனைய மக்கள் சடலத்தை கூட கொண்டு வர முடியாத அளவிற்கு ஆக்கிரமித்துள்ளனர் மாநகரசபை சட்டத்தை ஏன் பயன்படுத்த முடியாமல் உள்ளனர்?

காந்தி பூங்கா அதனை அண்டிய நீதிமன்ற பகுதி வாகன தரிப்பிடத்தில் ரூபா மோட்டார் சைக்கிளுக்கு 100 ரூபாவும் தலைகவசம் வைப்பதற்கு 100 ரூபாவுமாக 200 ரூபா அளவிடுகின்றனர். இந்த வாகன தரிப்பிடம் தனிப்பட்ட ரீதியில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதா? இது தொடர்பாக பலமுறை முறையிட்டும் நடவடிக்கை இல்லை இதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

எனவே இந்த மாநகர சபை வழி நடத்த முடியாவிட்டால் தேசிய மக்கள் சக்தியிடம் ஒப்படைத்தால் 6 மாதத்துக்குள் வீண் விரயங்களை நிறுத்தி நாட்டைகட்டியொழுப்பிய மாதிரி இந்த மாநகரசபையையும் கட்டியெழுப்புவோம். இது மக்கள் அரசாங்கம் மக்கள் ஆணையின்படி மக்களுக்கு சிறந்த சேவையை செய்வோம்" என்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் தீவைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் எண்ணெய் மற்றும் எரிபொருள் ஆய்வுக்காக துளையிடுவது பற்றிய தகவல்களும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்திற்கு கிடைத்துள்ளன

## இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு


CATHOLIC BISHOPS' CONFERENCE IN

Statement of the Catholic Bishops' Conference in Sri Lanka (CBCSL) Regarding Some of the Important Issues

(10-09-2026)

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் நடைபெற்ற தனது முழுமையான அமர்வின் போது நாட்டின் நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து தனது கவனத்தைச் செலுத்தி உள்ளது.

குறித்த விடயங்கள் குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்றை 10ம் திகதி வியாழக்கிழமை அன்று வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம், 2026 ஆகஸ்ட் 18 முதல் 20 வரை நடைபெற்ற தனது முழுமையான அமர்வின் போது, நாட்டின் நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து தனது கவனத்தைச் செலுத்தி உள்ளது.

சமூகத்தில் சமத்துவத்தையும் நீதியையும் ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் அண்மையில் எடுத்த சில நடவடிக்கைகளை ஆயர்கள் பாராட்டியுள்ளனர். இத்தகைய முயற்சிகளில், மன்னாரில் முன்மொழியப்பட்ட காற்று மின் நிலையங்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

14 காற்றாலை கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் வாக்குறுதி அளித்தபடி, இதுபோன்ற மின் நிலையங்களை மேலும் விரிவாக்கம் செய்யக்கூடாது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக அரசாங்கத்திற்கு இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்தக் கோரிக்கை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் இலங்கையின் மேன்மை தங்கிய அதிபர் அவர்களிடம் முன்வைக்கப்பட்டது.

இது ஒரு நீண்ட கால தேவையாக இருந்ததுடன், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் பெரிதும் பங்கு வகிக்கும் சமூகத்தின் இந்தப் பிரிவுக்கான சம்பள உயர்வை இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் பாராட்டுகிறது.

அதே வேளையில், யாழ்ப்பாண மனிதப் புதைகுழிகள் குறித்த பிரச்சினை தொடர்பாக நடுநிலையான விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறது. ஏற்கனவே நீண்டு கொண்டே செல்லும் செம்மணி அகழ்வாராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். செம்மணியுடன் தொடர்புடையதாக கூறப்படும் குற்றங்களுக்கான உண்மையையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்த இந்த முயற்சி தேவைப்படுகிறது.

அதேபோல், கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரின் போது நடந்த பயங்கரவாதம் மற்றும் பெருந்திரளான கொலைகள் தொடர்பான பிற சம்பவங்களும், இந்தக் காலகட்டத்திற்கு முந்தைய காலத்தில் அனுபவித்த பயங்கரவாதச் செயல்களும் உள்ளன.

மன்னார் தீவில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் பாரிய சுற்றுச்சூழல் சேதத்தை ஏற்படுத்துவது குறித்தும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் கவலை கொண்டுள்ளது.

சுற்றுச்சூழலை பாதிக்கும் இந்த நடவடிக்கையால் மக்கள் நிம்மதி இழந்துள்ள நிலையில், எண்ணெய் மற்றும் எரிபொருள் ஆய்வுக்காக மன்னார் தீவைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில் துளையிடுவது பற்றிய தகவல்களும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்திற்கு கிடைத்துள்ளன.

இவை பொருளாதார வளர்ச்சியை நோக்கிய நேர்மறையான முயற்சிகளாக இருக்கலாம். இருப்பினும், முறையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை வெளிப்படையான முறையில் நடத்துவதும், இதுபோன்ற திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் பொறுப்புள்ளவர்களின் கடமையாகும்.

இதுபோன்ற எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் முன்னர் உள்ளூர் பொது மக்களின் கருத்தை கண்டறிவதற்கான முறையான கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். மன்னார் தீவில் உள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரமும் நீர் வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளால் அவை பாதிக்கப்படக்கூடாது, இதன் மூலம் மக்களின் உரிமைகளும் கண்ணியமும் பாதுகாக்கப்படும்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் (Express Pearl) கப்பலினால் ஏற்பட்ட விரிவான சுற்றுச்சூழல் சேதம் குறித்தும், விதிக்கப்பட்ட இழப்பீட்டை கோருவதற்கு நீதிமன்றத்தின் தீர்மானத்தை பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் கவலை கொண்டுள்ளது.

மேலும், முத்துராஜவெல சதுப்பு நிலத்தை நிரப்புவதன் மூலம் தற்போதைய நில மீட்பு நடவடிக்கைகளால் ஏற்படும் அபாயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

மேலும் அபாயகரமான அபிவிருத்தி திட்டங்களுக்கு எதிராக முத்துராஜவெல சதுப்பு நிலத்தை பாதுகாப்பதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் தலைவர் குருநாகல் ஆயர் கலாநிதி ஹரோல்ட் அந்தோனி பெரேரா ஆண்டகை ,இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் பொதுச் செயலாளர் யாழ்ப்பாண ஆயர். கலாநிதி P. அந்தோனி ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, திருகோணமலை ஆயர் கலாநிதி நோயல் இமானுவேல் ஆண்டகை, கண்டி ஆயர் கலாநிதி வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, காலி ஆயர் கலாநிதி ரெய்மண்ட் விக்கிரமசிங்க ஆண்டகை, பதுளை ஆயர் கலாநிதி ஜூட் நிஷாந்த சில்வா ஆண்டகை, சிலாபம் ஆயர் கலாநிதி விமல் சிறி ஜெயசூரிய ஆண்டகை, இரத்தினபுரி ஆயர். கலாநிதி அந்தோனி வைமன் குரூஸ் ஆண்டகை, மன்னார் ஆயர் அதிவண. கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை, அனுராதபுரம் ஆயர். கலாநிதி சகாய ஜெயமான்ன ஆண்டகை, கொழும்பு துணை ஆயர் கலாநிதி மெக்ஸ்வெல் பு. சில்வா ஆண்டகை, கொழும்பு துணை ஆயர் கலாநிதி J.D. அந்தோனி ஜெயக்கொடி ஆண்டகை ஆகியோர் கையொப்படமிட்டுள்ளனர்.

# இலங்கையில் தங்கியுள்ள ரோஹிங்கியா போர் அகதிகள் சார்பாக ஜெனிவா 'மனித உரிமைகள் பேரவை'யில் முன்வைத்த கோரிக்கை!



ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் தங்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய இலங்கையில் வசிக்கும் மியன்மார் ரோஹிங்கியா பிரதிநிதியொருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

“2024 டிசெம்பரில், 57 சிறுவர்கள் உட்பட சுமார் 116 ரோஹிங்கியா மக்கள் ஆபத்தான கடல் பயணத்திற்குப் பின்னர் இலங்கைக்கு வந்தனர். இதன்போது இரண்டு படகுகள் மூழ்கியதில் ஆறு பேர் உயிரிழந்தனர். வன்முறை, சித்திரவதை, இடம்பெயர்வு மற்றும் அச்சுறுத்தல் போன்ற, அவர்கள் எதிர்கொண்ட அனுபவங்கள், அவர்கள் அரசியல் பாதுகாப்பை நாடுபவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனினும், அவர்கள் 20 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தடுப்புக்காவலில் உள்ளவர்களை விடுவிப்பதுடன், அதுவரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு, சட்டத்தரணிகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவர்களைச் சந்திக்க அனுமதிக்குமாறும், அரசியல் பாதுகாப்பை நாடுபவர்களை ‘சட்டவிரோத குடியேறிகள்’ எனக் குறிப்பிடுவதைத் தவிர்க்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் நாங்கள் கோரிக்கை விடுக்கிறோம்.” என மொஹமட் அன்வர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது அமர்வு 2026 செப்டெம்பர் 7ஆம் திகதி பிற்பகல் ஜெனீவாவில் ஆரம்பமானது.

இலங்கையில் வசிக்கும் ரோஹிங்கியா அகதியான மொஹமட் அன்வர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றியபோது, இலங்கையில் வசிக்கும் ரோஹிங்கியாக்கள் உள்ளிட்ட வேறு எந்த நாட்டிலும் நிரந்தர குடியிருப்பு பெற முடியாத ஏனைய அகதிகளுக்கும் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் மேலும் கோரிக்கை விடுத்தார்.

“மியன்மாரில் ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றதாகவும், தற்போது இனப்படுகொலை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும், அது முடிவுக்கு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாகவும் தகவல்களை ஆராய்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது. நாங்கள் ரோஹிங்கியாக்கள், நாடற்றவர்களாக உள்ளோம். எனவே, இலங்கையில் வசிக்கும் ரோஹிங்கியாக்கள் உள்ளிட்ட வேறு எந்த நாட்டிலும் நிரந்தர வதிவிடத்தைப் பெற முடியாத ஏனைய அகதிகளுக்கு குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.”

அரசியல் பாதுகாப்பை நாடும் ரோஹிங்கியாக்கள் மற்றும் அகதிகளுக்கு ஆதரவளிக்கும் இலங்கையின் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள், சோதனைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுத்துமாறும் அவர் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்குள் வந்த 40-இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உட்பட 100-இற்கும் அதிகமானோரை கொண்ட முதலாவது அகதி குழுவான ரோஹிங்கியாக்கள், கடலில் சிக்கித் தவித்தபோது அவர்கர்களை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களே முதலில் மீட்டனர்.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியன்மாரில் இருந்து தப்பிவந்த ரோஹிங்கியா போரினால் பாதிக்கப்பட்ட அகதிகளை மீண்டும் மியன்மாருக்கே திருப்பி அனுப்புவதாக கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்த கருத்துக்கு, குடிமைச் சமூக செயற்பாட்டாளர்கள் மட்டுமன்றி அரசியல்வாதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

வடக்கு கடற்பரப்பில் தமது உயிர்களைக் காப்பாற்றிய இலங்கை கடற்படையினருக்கு நன்றி தெரிவித்த மொஹமட் அன்வர், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றியபோது, பாணந்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் அனைத்து ரோஹிங்கியாக்களினதும் வாழ்வாதாரம், குடியிருப்பு, உணவு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளுக்கான உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் மேலும் கோரிக்கை விடுத்தார்.

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கைகளையும், மியன்மாருக்கான சுயாதீன விசாரணை பொறிமுறையின் அறிக்கைகளையும் நான் கருத்திற்கொள்கிறேன். 2024 டிசெம்பரில் யாழ்ப்பாணத்திற்கு அப்பால் கடற்பரப்பில் இருந்து சுமார் 105 ரோஹிங்கியாக்களை இலங்கை கடற்படை மீட்டமைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். பாணந்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் அனைத்து ரோஹிங்கியாக்களினதும் வாழ்வாதாரம், குடியிருப்பு, உணவு, கல்வி மற்றும் சுகாதார வசதிகளுக்கான உரிமைகளை உறுதி செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம்.”

ரோஹிங்கியாக்களை மீண்டும் மியன்மாருக்கு அனுப்புவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி, அகதிகள் தொடர்பான 1951ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சாசனம் உள்ளிட்ட மனிதாபிமானக் கோட்பாடுகள் மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகளை மீறும் செயலாகும் என சோனகர் இஸ்லாமிய கலாசார நிலையத்தின் தலைவர் ஓமர் கமில், 2025ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.



# எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில், தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



(02-09-2026)

எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில், முறையற்ற குழாய்க் கிணறுகளின் பயன்பாட்டை கட்டுப்படுத்த தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட பொருத்தமான பொறிமுறைகள் உருவாக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நீர்வளம் பேணுதலுக்கான பேராய்வுச் செயற்றிட்டம் மற்றும் வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் வட்டம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள "நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி" எனும் தொனிப்பொருளில் நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வுக் கண்காட்சி, 02-09-2026 அன்று புதன்கிழமை மாலை நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகிலுள்ள நெசவுக் கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் ஆளுநர் மேலும் உரையாற்றுகையில், முந்தைய காலங்களில் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீர் மிகவும் தூய்மையாகக் காணப்பட்டதுடன், மக்கள் கிணற்று நீரை நேரடியாகவே பருகி வந்தனர்.

ஆனால் தற்போது, குடிநீருக்காகப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். 1950களுக்குப் பின்னர் நிலத்தடி நீரை உறிஞ்சும் குழாய்க் கிணறுகளின் பயன்பாடு கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளமை, முறையற்ற விதத்தில் அதிகளவான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டமை மற்றும் கழிவுநீர் நிலத்தடி நீருடன் கலக்கின்றமை போன்ற காரணங்களால் நீரின் தரமும் அளவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, குழாய்க் கிணறுகளின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தத் தகுந்த சட்ட நடவடிக்கைகளும், முறையான கண்காணிப்பு வழிமுறைகளும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதனைச் சாத்தியமாக்க உரிய தரப்பினருக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். மழைநீரை நிலத்தடியில் சேமிக்கும் திட்டங்களை விரிவுபடுத்துவதுடன், கழிவுநீர் மற்றும் உவர் நீர் நன்னீருடன் கலப்பதைத் தடுக்க முறையான முகாமைத்துவ நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். நிலத்தடி நீரைப் பாதுகாப்பது என்பது ஒவ்வொரு தனிநபரின் கூட்டுப் பொறுப்பாகும். விழிப்புணர்வுடன் செயற்பட்டு, எதிர்காலச் சந்ததியினருக்காக நமது நீர் வளங்களைப் பாதுகாக்கும் இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு அனைவரும் முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டும்" எனத் தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டில் வசித்தாலும் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள் எனச் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து இவ்வாறான விழிப்புணர்வுத் திட்டங்களையும் கண்காட்சிகளையும் முன்னெடுத்து வரும் பேராசிரியர் சிறிஸ்கந்தராஜாவின் பங்களிப்பையும் ஆளுநர் பாராட்டினார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு மூன்றாவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி, எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறும்.

நீரியல் ஆய்வுகள் ஊடாகப் பெறப்பட்ட பெறுபேறுகள், மக்கள் ஈடுபாட்டுடனான செயற்திட்ட அனுபவங்கள், வழுக்கையாறு மற்றும் கிராமியக் குளங்களை முறையான தொழில்நுட்ப அறிவுடன் தூர்வாருதல் தொடர்பான விபரங்கள் முப்பரிமாண தோற்றங்களாக, செய்திகளாக மற்றும் படங்களாக இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், நீர்வளக் கண்காட்சியின் ஒரு கட்டமாக ஊருணி ஆற்றுகைக் களத்தில் தினமும் மாலை 7 மணி முதல் கருத்துரைகளும் கலை, பண்பாட்டு, பாரம்பரிய நிகழ்வுகளும் அரங்கேற உள்ளன.

நீர்வள சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாண மாநகர சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் தன்னார்வக் குழுக்கள் பலவற்றின் ஒத்துழைப்புகளுடன் நடைபெறும் இக்கண்காட்சியில் கலந்துரையாடல்கள், மாதிரிகள், பதாகைகள், ஆய்வு விபரங்கள், பரிசுப் போட்டிகள், விளையாட்டுகள், பாரம்பரிய நிகழ்ச்சிகள், குலுக்கல் பரிசுகள் ஆகியவை இடம்பெறுகின்றன.



இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், மருத்துவ பீட பீடாதிபதி, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24






# செப்.25 முதல் 27 வரை ரொறன்ரோவில் நடைபெறவுள்ள 'ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா' குழுவினரால் விமான நிலையத்தில் வரவேற்கப்பட்ட இயக்குனர் கார்த்திக் சுப்புராஜின் 'DOROTHY -டோரதி' திரைப்படக் குழுவினர்

## இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தலைமையில் கனடா வந்துள்ள 'DOROTHY -டோரதி' திரைப்படக் குழுவில் திரைப்படத்தின் கதாநாயகியானநட்சத்திர நடிகை கீர்த்தி சுரேஷ் உட்பட பலர் அடங்குகின்றனர்




எமது தாய் மண் உட்பட உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் பேசும் திரைப்படக் கலைஞர்கள்இ இயக்குனர்கள் மற்றும் தயாரிப்பாளர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் "ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா" எதிர்வரும் செப்.25 முதல் 27 வரை ரொறன்ரோவில் நடைபெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.



இதேவேளை 'ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா' குழுவினரால் 10ம் திகதி வியாழக்கிழமையன்று பியர்சன் விமான நிலையத்தில் வரவேற்கப்பட்ட பிரபல இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தலைமையில் 'DOROTHY -டோரதி' திரைப்படக் குழுவினர் மிகுந்த உற்சாகத்தோடு காணப்பட்டார்கள்.

இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் தலைமையில் கனடா வந்துள்ள 'DOROTHY -டோரதி' திரைப்படக் குழுவில் திரைப்படத்தின் கதாநாயகியான நட்சத்திர நடிகை கீர்த்தி சுரேஷ் உட்பட பலர் அடங்குகின்றனர். இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் அவர்களின் இயக்கத்தில் தயாராகியுள்ள 'DOROTHY -டோரதி' திரைப்படம் எதிர்வரும் செப்டம்பர் 10ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை நடைபெறவுள்ள 51வது Toronto International Film Festival இல் திரையிடப்படும் வாய்ப்பைப் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



எனவே 'ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா' இனது நிறுவனரும் தலைவருமான நண்பர் செந்தூரன் நடராஜா அவர்களின்; ஏற்பாட்டில் விழாக் குழுவினர் மற்றும் கனடா தமிழ் ஊடகவியலாளர்கள் விமான நிலையத்தில் 'DOROTHY -டோரதி' திரைப்படக் குழுவினரை வரவேற்றனர்.

மேற்படி'ரொறன்ரோ தமிழ் சர்வதேச திரைப்பட விழா' குழுவில் 'தேடிப்பார்' புகழ் குமார், கிருத்திகா தயா, கஜன், மற்றும் தமிழர் பாதுகாப்பு நிறுவன அதிபர் யோகராஜா ஆகியோருடன் திரைப்படத் தயாரிப்பாளர் மதிவாசன் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், யுகம் வானொலி கணபதி ரவீந்திரன். ஈசி 24 நியூஸ் கிருபா கிசான் மற்றும் 'பிகைன்ட் மீ' ஊடகர் நிரோஷ் உட்பட பலர் ஊடக நண்பர்களும் அங்கு சமூகமளித்து அந்த வரவேற்பு நிகழ்வை மேலும் சிறப்பித்தார்கள்.














# யாழ்ப்பாணத்தில் அவசரமாக விடுவிக்கப்பட வேண்டிய 2,030 ஏக்கர் காணிகள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு கடிதம்!


நூற்றுக்கணக்கான குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்கு வழிவகுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதுகாப்புத் தரப்பினரின் பயன்பாட்டில் இருந்து இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்கள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி, நிலங்கள் மற்றும் கட்டிடங்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

யுத்த காலத்தில் பாதுகாப்புத் தேவைகளுக்காக பொதுமக்களின் காணிகள் பயன்படுத்தப்பட்ட நிலையில், யுத்தம் நிறைவடைந்த பின்னரும் சில பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படாமல் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் சுமார் 2,030 ஏக்கர் காணிகள் இன்னமும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாகவும், இதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் மீள்குடியேற்றம் தாமதமடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பலாலி வீதியின் கிழக்குப் பகுதியில் சுமார் 290 ஏக்கர் காணி
பொன்னாலை-பருத்தித்துறை வீதியில் சுமார் 1,500 மீற்றர் நீளமான மூடப்பட்ட பகுதி
வசாவிளான் கிழக்கில் 511 பிரிகேட் முகாம் அமைந்துள்ள பகுதியில் 45 குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் 17 ஏக்கர் தனியார் காணி
மயிலிட்டித்துறை தெற்கில் சுமார் 130 ஏக்கர் பரப்பில் இதுவரை ஏறக்குறைய 5 ஏக்கர் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளமை
மயிலிட்டித்துறை வடக்கில் சுமார் 40 ஏக்கர் காணி
பலாலி வடக்கில் இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கான சுமார் 400 மீற்றர் நீளமான அணுகல் பாதை
ஆகியவை தொடர்பில் அவர் ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்துள்ளார்.



அத்துடன், மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் மைதானம், மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம், கிறிஸ்தவ மயானம், பிள்ளையார் ஆலயம், பொதுமக்களின் வழிபாட்டு மற்றும் சமூகப் பயன்பாட்டு இடங்கள், ஐஸ் பெக்டரி உள்ளிட்ட முக்கிய இடங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலாலி தெற்கு பகுதியில் அமைந்திருந்த தோலகட்டி பழச்சாறு தொழிற்சாலை மற்றும் அதனருகிலுள்ள சிறி வேலுப்பிள்ளை வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணிகளையும் விடுவிக்க வேண்டும் எனவும் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

காணிகளை விடுவிப்பது என்பது வெறுமனே நிலங்களை மீளக் கையளிப்பது மாத்திரமல்ல. நூற்றுக்கணக்கான குடும்பங்களின் மீள்குடியேற்றம், விவசாய நடவடிக்கைகள், பொதுப் போக்குவரத்து, வழிபாடு மற்றும் சமூக-பொருளாதார நடவடிக்கைகளை மீள இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான முக்கிய நடவடிக்கையாகும்.

எனவே, ஜனாதிபதி இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி, சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டு, நீண்டகாலமாக விடுவிக்கப்படாமல் உள்ள காணிகளை விரைவாக விடுவிக்க வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா தனது கடிதத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ்நாட்டில் மருத்துவ விடுப்பு கேட்ட இலங்கைத் தமிழரை காலணியால் அடிக்க முயன்ற துணை ஆட்சியர்: -ஆத்திரமுற்ற இலங்கை தமிழர்கள் அலுவலகத்தை முற்றுகையிட்டு 5 மணி நேர போராட்டம்





மன்னார் நிருபர்
(11-09-2026)

மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ள இலங்கை தமிழர் ஒருவர் தனித்துணை ஆட்சியரிடம் மருத்துவ விடுப்பு கேட்க சென்ற போது அவரை காலணியால் தாக்க முயன்றதை கண்டித்து 9ம் திகதி வியாழன் மாலை இலங்கை தமிழர்கள் தனித்துணை ஆட்சியர் அலுவலகத்தை ஐந்து மணி நேரத்துக்கு மேலாக முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாழ வழியின்றி இலங்கைத் தமிழர்கள் கடல் வழியாக தனுஷ்கோடிக்கு வந்திறங்கிய இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் வசித்து வருகின்றனர்.இலங்கை தமிழர்களை கண்காணிப்பதற்காக மண்டபத்தில் தனித்துணை ஆட்சியர் அலுவலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

இலங்கை தமிழர்கள் வெளியூர் மற்றும் வெளி மாவட்டங்களில் தங்கி உள்ள தங்கள் உறவினர்கள் வீட்டுக்கு செல்வதற்கும், மருத்துவம் சிகிச்சை மற்றும் கல்வி பயில வெளியூர் சென்றாலும் தனித்து தனித்துணை ஆட்சியரிடம் விடுப்பு பெற்று செல்ல வேண்டும்.

இந்நிலையில் உள்நாட்டு போர் காரணமாக இலங்கையில் இருந்து அகதியாக தனுஷ்கோடி வந்திறங்கி 2007 ஆம் ஆண்டு முதல் மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜெகன் (50) என்பவர் மருத்துவ சிகிச்சைக்காகவும், உடல் நலம் சரியில்லாததால் மருத்துவ உதவிக்காக தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சரை நேரில் சந்தித்து மனு அளிப்பதற்காக சென்னை செல்ல மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் தனித்துணை ஆட்சியரிடம் மனு அளித்திருந்தார்.

மனுவை பெற்றுக் கொண்ட ஆட்சியர் விடுப்பு வழங்குவதற்கு தனித்துணை ஆட்சியர் லஞ்சம் கேட்டதாக சொல்லப்படுகிறது.

ஜெகன் பணம் கொடுக்காததால் தொடர்ந்து அவருடைய விடுப்பு மனு நிராகரிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று வியாழன் மதியம் இலங்கை தமிழர் ஜெகன் தனித்துறை ஆட்சியரை சந்தித்து விடுப்பு விண்ணப்பம் தொடர்பாக கேட்க சென்றபோது தனி துணை ஆட்சியர் கலை மன்னன் இலங்கைத் தமிழர் ஜெகனை காலணியை கழற்றி அடிக்க முயன்றுள்ளார்.

இதனை வீடியோவாக பதிவு செய்த இலங்கை தமிழர் ஜெகன் இது குறித்து காவல் நிலையத்தில் புகார். இதனிடையே இலங்கை தமிழரை தனி துணை ஆட்சியர் காலணியால் தாக்க முயன்றதை கண்டித்து தனித்துணை ஆட்சியர் அலுவலகத்தை இலங்கை தமிழர்கள் சுமார் ஐந்து மணி நேரத்திற்கு மேலாக முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவலறிந்த ராமநாதபுரம் வட்டாட்சியர் காளீஸ்வரர் ஜெகன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆனால் தனித்துறை ஆட்சியர் கலை மன்னன் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டும், அவரை உடனடியாக பணியில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும் மற்றும் இலங்கை தமிழர்கள் விடுப்பு எடுப்பதற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நீக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர்

இலங்கை தமிழர்களின் கோரிக்கைகளை கேட்டுக்கொண்ட ராமநாதபுரம் வட்டாட்சியர் இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சிவகுரு பிரபாகரனிடம் தகவல் தெரிவிப்பதாகவும் வரும் திங்கட்கிழமை தனித்துணை ஆட்சியர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுப்பார் என உத்தரவாதம் அளித்ததை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழர்கள் தங்களது போராட்டத்தை கைவிட்டு முகாமுக்குள் சென்றனர்.

மருத்துவ விடுப்பு கேட்ட இலங்கைத் தமிழரை காலணியால் தாக்க முயன்ற தனித்துறை ஆட்சியரின் வீடியோ சமூக வலைதளங்களில் அதிக அளவு பகிரப்பட்டு வந்த நிலையில் இது குறித்து பலரும் தங்களது கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

# அநியாயத்திற்கு ‘நல்லவரான’ அர்ச்சுனா, எம்.பி.பதவியிலிருந்து விலகுவாரா? அல்லது விலக்கப்படுவாரா?



***“யாழ்ப்பாணம் தென்மராட்சி மக்களின் முட்டாள்தனத்தினால் தமிழ் தேசிய அரசியலில் கடந்த 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் மூலம் ஒரு “புதுவடிவமாக” உருவெடுத்து இன்று தமிழ் தேசிய அரசியலையே நாறடித்துக் கொண்டும் தமிழினத்தையே தலைகுனிய வைத்துகொண்டுமிருக்கும் இந்த அர்ச்சுனா இராமநாதன் என்னும் அரசியல் (வாந்தி)வாதி தற்போது ஒரு சட்ட சிக்கலில் மாட்டியுள்ளார். இதனால் அவரின் எம்.பி.பதவி பறிபோகக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ள சூழலில்கூட தனது பொய், பித்தலாட்டங்கள் மூலம் தமிழ் மக்களை குறிப்பாக புலம்பெயர் தமிழர்களை ஏமாற்றி பணம் பறிக்கவே அவர் முயற்சிக்கின்றார். “நீதிமன்றத் தீர்ப்பினால் தனது எம்.பி. பதவி பறிபோவது உறுதி” என்ற நிதர்சனம் புரிந்ததும், “நானே எம்.பி.பதவியிலிருந்து இராஜிநாமா செய்யப்போகின்றேன்” என பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் அறிவிக்கும் அவர். மறுபுறம் “எம்.பி.பதவியைக் காப்பாற்ற வழக்காடப் பணம் தாருங்கள்” என புலம் பெயர் தமிழர்களிடம் கேட்கின்றார். எம்.பி பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவிக்கும் ஒருவருக்கு வழக்காட எதற்குப் புலம்பெயர் தமிழரின் பணம்?”***

---------------------------------------------------------------------------------------- **கே.பாலா -**

இலங்கைத் தமிழ் அரசியலின் அண்மைய பக்கங்களில், மக்களுக்கான ஆக்க பூர்வமான குரலாக ஒலிப்பதற்குப் பதிலாக, அருவருப்பான குரலாக ஒலிப்பவராக, ஊடக வெளிச்சத்தையும் பரபரப்பையும், பணத்தையும் மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்கும் ஒருவராக, பாராளுமன்றத்தின் கண்ணியத்தையும், மக்கள் அளித்த வாக்குகளின் பொறுப்பையும் மறந்து, அரசியல் முதிர்ச்சியற்ற கோமாளித்தனங்கள், பகைமை வெறுப்பை விதைக்கும் வன்ம உரைகள், ஆதாரமற்ற பொய்கள் மற்றும் திட்டமிடப்பட்ட பித்தலாட்டங்கள் செய்யும் ஒருவராக சுயேட்சைக்குழு 17 இன் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான அர்ச்சுனா இராமநாதனின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

யாழ் மாவட்ட மக்களின் குறிப்பாக தென்மராட்சி மக்களின் முட்டாள்தனத்தினால் தமிழ் தேசிய அரசியலில் கடந்த 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் மூலம் ஒரு “புதுவடிவமாக” உருவெடுத்து இன்று தமிழ் தேசிய அரசியலையே நாறடித்துக் கொண்டும் தமிழினத்தையே தலைகுனிய வைத்துகொண்டுமிருக்கும் இந்த அர்ச்சுனா இராமநாதன் என்னும் அரசியல் (வாந்தி) வாதி தற்போது ஒரு சட்ட சிக்கலில் மாட்டியுள்ளார். இதனால் அவரின் எம்.பி.பதவி பறிபோகக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ள சூழலில்கூட தனது பொய், பித்தலாட்டங்கள் மூலம் தமிழ் மக்களை குறிப்பாக புலம்பெயர் தமிழர்களை ஏமாற்றி பணம் பறிக்கவே அவர் முயற்சிக்கின்றார்.

அரசு மருத்துவ அதிகாரி பதவியை முறைப்படி இராஜிநாமா செய்யாமலே 2024 பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்டு யாழ் மாவட்ட எம்.பி.யாக வெற்றி பெற்றமை சட்டவிரோதமானது என்ற சட்டச் சவாலும், அதனால் அவரது பதவி எந்நேரமும் பறிபோகலாம் என்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தொங்குவாளும் ஒருபுறம் அவரை இறுக்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் “நான் எம்பி பதவியை தியாகம் செய்யத் தயார், எனக்குப் பின் என் தங்கம் கௌசல்யா நரேந்திரன் அந்த இடத்திற்கு வருவார்” என்று அவர் தொடர்ந்து உதிர்க்கும் வார்த்தைகள், கொள்கைப் பிடிப்புள்ள ஒரு தியாகத்தின் குரலாக ஒலிப்பதாகத் தோன்றினாலும் அதன் பின்னால் அவரின் “நரிக்குணம்” தான் உள்ளது.

எம்.பி.பதவிக்கு ஏன் ஆபத்து?

அர்ச்சுனா இராமநாதன் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்ட காலத்தில், சுகாதார அமைச்சின் கீழ் பொது மருத்துவ அதிகாரியாக பணியாற்றியதன் மூலம் அரசுடன் ஒப்பந்த அடிப்படையில் தொடர்பில் இருந்தார். அரசியலமைப்பின் விதிகளின்படி அரசு அதிகாரியாக இருக்கும் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தகுதியற்றவர் என்பதால், அவ்வாறு ஏதேனும் தேர்தல் ஒன்றில் அவர் போட்டியிட விரும்பினால் முதலில் தனது அரச பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும்.

ஆனால் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் ஒரு விசாரணைக்காக அர்ச்சுனா இராமநாதன் சுகாதார அமைச்சினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார், இவ்வாறான நிலையில் தான் அவர் சுயேட்சைக்குழு 17 இன் தலைவராக “ஊசி” சின்னத்தில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு 20,487 வாக்குகள் பெற்று யாழ் மாவட்ட எம்.பி.யாக பாராளுமன்றத்திற்கு தெரிவானார். இவரின் சுயேட்சைக்குழு யாழ் மாவட்டத்தில் மொத்தமாக 27,855 வாக்குகளைப் பெற்றிருந்தது.

இவ்வாறான நிலையில் யாழ் மாவட்ட எம்.பி.யான அர்ச்சுனா இராமநாதனின் எம்பி பதவியின் செல்லுபடியாகும் தன்மையை சவாலுக்கு உட்படுத்தி அவரை எம்.பி.பதவியிலிருந்து நீக்கக் கோரி “எந்த உரிமையில் இப்பதவியை வகிக்கிறீர்கள்” என்ற பேராணை



மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 2025 மே 14 இல் சமூக ஆர்வலரான ஓஷல ஹேரத் தாக்கல் செய்தார். மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் மாயாதுன்ன கொரயா மற்றும் மஹேன் கொபல்லவ ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போது பல கட்டங்களாக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் மிக விரைவில் தீர்ப்பு அறிவிக்கப்படவுள்ளது.

அர்ச்சுனா பதவி விலகுவதாக அறிவிப்பது ஏன்?

நீதிமன்ற விசாரணைகளில் “2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்ற காலத்தில் ஒரு விசாரணைக்காக அர்ச்சுனா இராமநாதன் சுகாதார அமைச்சினால் பணி இடைநீக்கம் மட்டுமே செய்யப்பட்டிருந்தார். அவர் பணி நீக்கம் செய்யப்படவில்லை. அத்துடன் அவர் பணியிலிருந்தும் இராஜிநாமாவும் செய்யவில்லை ஆகையினால் அவர் ஒரு அரச அதிகாரி என்ற பதவியில் இருந்தவாறே தேர்தலில் போட்டியிடடார்” என சுகாதார அமைச்சும் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளதால் “அர்ச்சுனா இராமநாதன். அரச பதவியை இராஜிநாமாசெய்யாமல் தேர்தலில் போட்டியிட்டதால் அவர் எம்.பி.பதவி வகிக்க தகுதியற்றவர்” என்ற தீர்ப்பு வருவதற்கே அதிக வாய்ப்புகள் உள்ளன.

அவ்வாறாக அர்ச்சுனா இராமநாதன். அரச பதவியை இராஜிநாமாசெய்யாமல் தேர்தலில் போட்டியிட்டதால் அவர் எம்.பி.பதவி வகிக்க தகுதியற்றவர்” என்ற தீர்ப்பு வந்தால் அர்ச்சுனா நாட்டில் பின்னர் நடைபெறும் தேர்தல்கள் எவற்றிலும் போட்டியிட முடியாது. அதேவேளை அவ்வாறு தீர்ப்பு வருவதற்கு முன்னர் அவர் தனது எம்.பி. பதவியை தானாக விரும்பி இராஜிநாமா செய்தால். சில வேளைகளில் நீதிமன்றம் தீர்ப்பை வழங்காது வழக்கை தள்ளுபடி செய்யும்.அப்படி தள்ளுபடி செய்தால் நாட்டில் பின்னர் நடக்கும் தேர்தல்களில் அர்ச்சுனாவால் போட்டியிட முடியும்.

அதனால் தான் விரைவில் நடை பெற-லாமென எதிர் பார்க்கப்படும் மாகாணசபைகளுக்கான தேர்தலில் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியை இலக்கு வைத்து நீதிமன்றத்தீர்ப்பு வருவதற்கு முன்னரே எம்.பி. பதவியிலிருந்து தானாக இராஜிநாமா செய்ய அர்ச்சுனா திட்டமிடுகின்றார். அந்த திட்டத்தில்தான் “நானே பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகப் போகின்றேன் எனக்குப் பின் எனது பாராளுமன்ற ஆசனத்திற்கு கௌசல்யா நரேந்திரன் தெரிவாகி எம்.பி.யாவார்” என்ற தொடர் அறிவிப்புகளை விடுத்து வருகின்றார்.

கௌசல்யா எம்.பி.யாக முடியுமா?

அர்ச்சுனா இராமநாதன் எம்.பி.பதவியிலிருந்து இராஜிநாமா செய்தால் அவரின் சுயேட்சைக்குழு 17ஐ சேர்ந்த கௌசல்யா நரேந்திரன் எம்.பி.யாக முடியுமா என்ற கேள்விக்கு “ஆம் முடியும்” என்பதே பதில். அரசியலமைப்பின் படி ஒரு கட்சியை சேர்ந்த எம்.பி. ஒருவர் எம்.பி,.யாக பதவி வகிக்கும் காலத்தில் அவர் இறந்தாலோ அல்லது ஏதேனும் ஒரு காரணத்திற்காக எம்.பி.பதவியிலிருந்து இராஜிநாமா செய்தாலோ அவரின் பாராளுமன்ற ஆசனத்திற்கு அவரின் கட்சியை சேர்ந்த அவர் போட்டியிட்ட மாவட்டத்தில் போட்டியிட்டு அவருக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்குகளைப்பெற்ற ஒருவர் வர முடியும்.

அந்த வகையில் சுயேட்சைக்குழு 17 இன் தலைவராக “ஊசி” சின்னத்தில் அர்ச்சுனா இராமநாதன் போட்டியிட்ட நிலையில் அவரின் குழு யாழ் மாவட்டத்தில் 27,855 மொத்த வாக்குகளைப் பெற்றது. இதில் அர்ச்சுனா இராமநாதன் 20,487 விருப்பு வாக்குகளைப் பெற்ற நிலையில் (பாராளுமன்றத் தேர்தல் வாக்களிப்பின்போது விரும்பிய கட்சிக்கு ஒரு வாக்கும் அதில் போட்டியிடும் வேட்பாளர்களில் விரும்பிய3 பேருக்கு 3 விருப்பு வாக்குகளும் அளிக்க முடியும்) 15789 விருப்பு வாக்குகளை ப்பெற்று அவருக்கு அடுத்த இடத்தில் கௌசல்யா நரேந்திரன் இருக்கின்றார். அந்த வகையில் அர்ச்சுனா இராமநாதன் பதவி நீக்கப்பட்டாலும் தானாக இராஜிநாமா செய்தாலும் அவரின் பாராளுமன்ற ஆசனத்திற்கு கௌசல்யா நரேந்திரனே தெரிவாவார்.

பணத்திற்கு இலக்கு வைக்கும் அர்ச்சுனா

இங்குதான் அர்ச்சுனாவின் பணத்தாசை அவரைபோட்டு ஆட்டுகின்றது. “எம்.பி.பதவியிலிருந்து நானே பதவி விலகப் போகிறேன் எனக்குப் பின் கௌசல்யா நரேந்திரன் எம்பியாவார்” என்ற அவரது தொடர் அறிவிப்புகள் சில மாதங்களாக வந்து கொண்டிருந்தாலும் அவரது “இராஜிநாமா” மட்டும் எழுத்து வடிவத்தைப் பெறவே இல்லை. அதேநேரம், தான் எம்.பி.யாக தொடர வேண்டுமென புலம் பெயர் தமிழர்கள் விரும்பினால் தனது எம்.பி பதவியைத் தக்கவைக்க நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ள நிதி தேவை எனக் கூறி, புலம்பெயர் தமிழர்களிடம் அவர் தீவிர பணத் திரட்டல் நடத்துகின்றார்.

நீதிமன்றத் தீர்ப்பினால் தனது எம்.பி. பதவி பறிபோவது உறுதி என்ற நிதர்சனம் புரிந்தும், “பதவியைக் காப்பாற்ற வழக்காட நிதி வேண்டும்” என்ற பெயரில் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களின் உழைப்பையும் உணர்ச்சிகளையும் அப்பட்டமாகச் சுரண்டி அவர் நடத்தும் “வசூல் வேட்டை”யும் தியாகி வேடமிட்டு பரிதாபத்தைத் தேடுவதும், நீதிமன்றப் போராட்டத்தின் பெயரால் நிதி திரட்டித் தன் சொந்தப் பையை நிரப்ப முயல்வதும் ஒரே நேரத்தில் அரங்கேறும் அப்பட்டமான ஏமாற்று வித்தை. ஒருபுறம் “எம்.பி.பதவியை விட்டு விலகப் போகிறேன்” என்கிறார். மறுபுறம் “எம்.பி.பதவியைக் காப்பாற்ற வழக்காடப் பணம் தாருங்கள்” என்கிறார். எம்.பி. பதவியிலிருந்து விலகப்போகும் ஒருவருக்கு வழக்காட எதற்குப் புலம்பெயர் தமிழரின் பணம்?

கொள்கை ரீதியாகப் பதவி விலகத் தயார் என்ற அறிவுப்புக்களை விடுத்துக்கொண்டு சட்டப் போராட்டத்தின் பெயரால் புலம்பெயர் சமூகத்தின் உணர்வுகளைப் முதலீடாக்கிப் பணம் சேகரிப்பதற்கான ஒரு திட்டமிட்ட நாடகத்தை அவர் அரங்கேற்றுகின்றார். உண்மையிலேயே அவர் தார்மீக அடிப்படையில் பதவியைத் துறக்கத் துடிக்கும் ஒரு நேர்மையாளராக இருந்தால் நீதிமன்றத் தீர்ப்பால் பதவி பறிபோவது உறுதி என்றறிந்தும், “நான் பதவி விலகப்போகிறேன்” என்ற பிம்பத்தைக் காட்டி புலம்பெயர் தமிழர்களிடம் நிதி திரட்ட வேண்டிய அவசியம் கிடையாது. “நான் எனது எம்பி பதவியை தியாகம் செய்யத் தயார், எனக்குப் பின் கௌசல்யா நரேந்திரன் அந்த இடத்திற்கு வருவார்” என்று கூறி மக்கள் மத்தியில் ஒரு போலிப் பரிதாப அலையை உருவாக்கி வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான அடித்தளத்தை போடுவதுடன் முடிந்தவரை புலம்பெயர் தமிழர்களிடம் பணம் கறப்பதே அவரின் திட்டம்.

இதற்கு அவர் அண்மையில் வெளியிட்ட அவரது சமூக வலைத்தள பதிவே ஆதாரமாகவுள்ளது. அதில் அவர் இவ்வாறு கூறுகின்றார். “நான் தற்போது கொழும்பில் இருக்கின்றேன். ஆம் நான் கொழும்பில்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் நான் எனது உழைப்பையும் பார்க்க வேண்டும். எனது பிஸ்னஸ் இங்குதான் உள்ளது. அத்துடன் எனக்கு யாழ்ப்பாணத்திலும் வீடு இல்லை. நீங்கள் யாராவது (புலப்பெயர் தமிழர்கள்) அங்கு வீடு வாங்கித்தந்தால் நான் அங்கு இருப்பேன்” ஏற்று கூறிவிட்டு பெரிதாக ஒரு நக்கல் சிரிப்பு சிரிக்கின்றார். பின்னர் “நான் கொழும்பில்தான் இருப்பேன். நான் யாழ்ப்பாண எம்.பி. யாழ்ப்பாணத்தில்தான் இருக்க வேண்டும் என நீங்கள் யாராவது நினைத்தால் அதற்கு வேறு யாரையும் பாருங்கள்” என்கின்றார். இதற்கு பின்னரும் இந்த அர்ச்சுனா என்னும் தற்குறிக்கு யாராவது ஆதரவு வழங்குவார்களாக இருந்தால் தந்தை செல்வா கூறியதுபோல் “கடவுளாலும் தமிழர்களைக் காப்பாற்ற முடியாது”.

# A PHILOSOPHICAL POINT OF VIEW OF KAVIARASU KANNADASAN'S CINEMA TAMIL POEMS

BY: K. ANANTHANATHAN, MA, MSW, RSW
Registered Social Worker with OCSWSSW

**BACKGROUND:**

As a student of philosophy, I think it is better to explain my understanding of poems in a few words, before writing this article about Kaviarasue Kannadasan's philosophical Tamil cinema songs and 100th Birthday (June 24, 1927, October 17, 1981) celebration and his contribution to Tamil cinema poems from a philosophical point of view. First, I would like to explain briefly Tamil cultural background. What is culture? Culture has been described by a writer as a "way of life" as "sweetness and light", as "activity of thought and receptiveness to beauty and human feeling". These brief descriptions are sufficient to show the comprehensiveness and the indispensability of culture, for one must have a way of life and that way of life should be combined with sweetness and light with beauty and human feeling.

Tamil culture is nothing else but their way of life a pattern of gracious living that has been formed during the centuries of their history. Tamil culture has its worldwide outlook, trade, and navigation, the Tamils eschewed insularity and developed a remarkable universality of outlook and the ideal of the expanding self. Two verses often quoted of Tamil poetry induce one to examine the development of the expanding self within Tamil culture. One is a verse from PURAM. The poem outlines a philosophy of individual dignity, real love, and personal responsibility:

**"This world entire is my home,**
**All mankind my Kinsman,**
**Nor good nor ill can others do to me,**
**Sickness and death are nothing new.**
**Elated we are not by success.**
**We fret not in defeat, for**
**Life is a frail boat in a perilous stream**
**Following its destined course**
**Seers divine taught us thus-and so**
**We marvel not at the great**
**Much less do we despise the low".**

**Kaniyan Punkunran.**
**(Verse 192 Purannuru)**

The above verse sums up effectively the important aspects of the social, cultural, religious, and philosophical traditions in Tamil culture. Kaviarasar Kannadasan always express and reflected this Tamil real love or unconditional love through his poems, speeches, and writings.

Human life is caught in the ceaseless movement of time, of perpetual coming-to-be and passing-away. The changing forms of human life and of native have captured man's reflective attention in the East and West throughout the ages by shaping the main thrust of his philosophical quest and by posing the basic questions of his religious life. Consider for a moment the perpetual change of role, seen and actor in nature's theater: Summer's growth becomes fall's harvest; night following day, clouds of white alter into ominous thunder heads. Children grow into aged men. Is it surprising that the earliest thinkers were amazed at the transience of all forms and contents of the world, including themselves? Yet such coming to be and ceasing to be essentially define time. In this maelstrom of change man has sought to understand the meaning, of the life given to him and its relationship to the nature of all beings. What I am emphasizing here is that the poet's and the philosopher's questions are the same. Ultimately what is the purpose of human life? Subramanya Bharathi also asking the same question in his poems.

Good poets whatever their time, nationality, and language are exceptional beings and carriers of divine truth. The only significant difference from poet to poet is perhaps the difference in the chronology of their lives. In the external forms of poetry, such as technique and style, certain differences may exist among them; but all true poets belong to the one unit and whole of poetic genius. Each poet in his own manner brings to this world a new message, a new form of reality. This message is the truth of creation. A poet tries to express this ultimate reality in order to inspire human beings. hThis reality is expressed in a language that is suited for a period in time and for social way of thinking. It is because reality is affected by units of time, tradition, and society, that a poet attempts to express this reality in terms of those units.

As poetry can distil the sensuous enjoyment of all the senses and as it is born in the very deep experience of those senses ultimately perceiving the aspect of ultimate reality, it carries with the intoxication of liquor, the sweetness of a limitless firmament. Poetry is born over a very deep experience of the senses, the intellect, the mind as well the spirit. Without separating the joy or the sorrow of the world, a poet looks at life, at the completeness of the world of joys and sorrows. One who merely looks at the joy of life and runs away from its sorrows cannot be a true poet; on the contrary poetry is the expression of the frenzy arising from the intoxication of life. Poetry is born of the experience of the harmonies of the world and great passion that emanates from experiencing the tiniest joys of the universe. Not only joy, but sorrow too is a note in the harmony of the world. The above aspects we can clearly see in the works of Kaviarasar Kannadasan. The life vision of completeness of life is the primary experience of Indian poetry. Kaviarasar Kannadasan belongs to this group of Indian poets as I mentioned in this article earlier like Maha Kavi Subramanya Bharathi who perceived life as whole and complete

**BRIEF BIOGRAPHY OF KAVIARASU KANNADASAN:**

Kannadasan (means Servant of Lord Krishna) June 24, 1927 – October 17, 1981, was a Tamil poet and Tamil Film Lyricist, who was one of the greatest most important Tamil poet after Mavakavi Subramanya Bharathiyar in the Tamil language. Frequently called Kaviarasu (king of poets), was most familiar for his song Lyricist in Tamil films over fifty years and contributed around 5000 Tamil film Lyrics apart from 6000 Tamil poems and 232 books, popular being the 10 parts religious essay on Hinduism (Arthamulla Indhumatham). He was a poet, novelist, Lyricist, politician, film producer, literary editor. His original name was A.L. Muthiah, born in Sirukoodaipathi, Tamil Nadu, South India. Died October 17, 1981 Chicago, in United States. Knnadsan fathered 15 kids in all , by his three wives. He was a prolific poet and prolific father as well. He died at the age of 56 on October 17, 1981in America.

Kaviarasu Kannadasan, the great Lyricist, is still remembered for his embellished language. "I am permanent, I will remain forever"-these are the words of the legend Lyricist that are remembered even today, thanks to his wer-green Lyrics. We feel proud of him. Kannadasan was born on June 24, 1927 to the couple Saththappa Chettiar-Visalakshi as their eighth child. His given name was Muthiah servant of Lord Krishna. Later he changed his name to Kannadasan when he started writing poetry. Born in Sirukudalpatti, in Ramanathapuram District. Kannadasan was given in adoption Pazhaniyappa Chettiar -Sikappiach, couple belonging to Muthupattinam. He was put Mr. Gurukulam High Secondary School in Amaravathiputhier near karaikudi. But his education was discontinued after grade 8 as they could not afford further education. But Kannadasan took great efforts at developing his skills and improving his knowledge.

Thanks to his efforts, he joined as the editor of "Thirumagai", a magazine published from Pudukottai, at his young age at 17. His poems were published in that magazine. And, he became the editor of "Thirai Oli" in the year 1945 to became the editor of "Chandamarutham", a magazine, published by Modern Theatres in 1947. Later he resigned from "Chandamarutham" with the goal of becoming Cinima Lyricist and met the concerned people in Jupiter Pictures at Coimbatore. At that time, the film "Kanniyin Kaadhali" was in the making Mr. K. Rammanathan was directing the film. Kaviarasu Kannadasan wrote songs and got introduced to the director by Mr. Venkatasamy, the husband of actress U. R. Jeevarathnem. His Lyrics were approved. His song "Kalangathiru Maname" was sung for heroine Maduradevi by playback singer T. V. Rathinem. Kaviarasu Kannadasan's first song itself became a hit. And, he started writing dialogues also for Tamil movies. In the meantime, he plunged into politics too. And, subsequently, he became a film producer too. His first production was "Maalaiyitta Mangai" Archi Manorama, who was a stage artiste that time, was introduced to cinema through this film.

**SIGNIFICANCE OF HIS PHILOSOPHICAL FAMOUS CINEMA SONGS:**

**Ponal Pohattum Poda – Intha**
**Poomiyil Nilaiyai Vazhanthavar – Yaarada**
**Vanthathu Theriyum Povathuenge**
**Vaasal Nmakke theriyathu**
**Vathavellam Thankividdal – Intha**
**Mannil Namakke Idamtethu**
**Vazhkai Enpathu Viyaparam – Varum**
**Jananam Enpathu Varavahum – Athil**
**Maranamenpathu Selavaahum**

**English Translation:**

**Let the Passions and bonds Pass by**
**Who has lived in this land – Forever?**
**Path of Arrivals is Known – But**
**Path of Departure and the route – Unknown**
**If all who Came opt to stay**
**Where is the Space in this Sphere?**
**Life is just a Business – In which**
**The Birth is Credit and**
**Death is Debit**

**Addai Inri Piranthome Assaiinri**
**Piranthoma?**
**Adai Mudikkaiyile Alli Chenror**
**Yaarumundo?**

**English Translation:**

**Though Born without a Dress**
**Did we come without Passions?**
**When we complete the Merriment**
**Can anyone carry their Possessions?**

**Veedu Varai Uravu**
**Veethi Varai Manaivi**
**Kadu Varai Pillai**
**Kadaisi Varai Yaaro?**

**English Translation:**

**The children, till the house**
**The wife, till the street**
**The son, up to the cemetery**
**Who will come beyond that?**

**Ullam Enpathu Aamai – Athil**
**Unmai Enpathu Oomai**
**Solil Varuvathu Paathi – Nengil**
**Thoonkikidappathu Neethi**

**English Translation:**

**Mind is like a Tortoise in which**
**The Truth hides in silence**
**Words can Bring out only the half**
**While Justice calmly sleeps**

**Assaiye Alai Pole**
**Naamellam Athanmele**
**Odam Pole Adiduvome – Vaazhkailile**
**Paruvam Ennum Kaatrrile**
**Parakkum Kaathal Therile**
**Aanum Pennum Mahizhvar**
**Suham Pervvar – Athisayam Kaanpaar**
**NaalIlai Ulahin Paathaiyai Inru**
**Yaar Kaanuvar?**

(continued on page 22)




# அநுர அரசிலும் தொடரும் உள்ளே...வெளியே...அரசியல்

***"இலஞ்ச, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் எதிர்க்கட்சிகளின் முக்கிய அரசியல்வாதிகள் அடுத்தடுத்துக் கைது செய்யப்படும் செய்திகள் தலைப்புச் செய்திகளாகி மக்கள் மத்தியில் ஒருவித எதிர்பார்ப்பை, பரபரப்பை ஏற்படுத்துகின்ற நிலையில் அடுத்த மணித்தியாலமே கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றப் பிணையில் விடுவிக்கப்படுவது "இது சட்டத்தின் பலவீனமா அல்லது அநுர அரசின் மக்களை ஏமாற்றும் அரசியல் நாடகமா?" என்ற கேள்விகளையே எழுப்புகின்றது."***

**------------------------------------------------------------ கே.பாலா -**

ஒரு பிரதான கட்சி ஆட்சியில் இருக்கும் போது அதற்கு அடுத்ததான பிரதான கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும். அத்துடன் அடுத்தடுத்த நிலைகளில் உள்ள கட்சிகள் சில அரசின் பங்காளிகளாகவும் இன்னும் சில சிறிய எதிர்க்கட்சிகளாகவும் இருக்கும். இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகளாக இருப்போர் அதிலும் பிரதான எதிர்க்கட்சியாக இருப்போர் அரசின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பர். அதில் பிரதானமானது "அரசியல் பழிவாங்கல்" என்ற குற்றச்சாட்டு. அதேவேளை இதே எதிர்க்கட்சியினர் ஆட்சிபீடமேறும்போது அரசாக இருந்தவர்கள் பிரதான எதிர்க்கட்சியானவுடன் அவர்கள் நடைமுறை அரசு மீது வைக்கும் பிரதான குற்றச்சாட்டும் இந்த "அரசியல் பழிவாங்கல்" தான்.

அரசாக இருப்போர் எதிர்க்கட்சியில் தமக்கு சவாலாக இருப்போர், தம்மை கடுமையாக விமர்சிப்போரை இலக்கு வைத்து ஏதாவது குற்றச்சாட்டுக்களில் வழக்குகளைத் தாக்கல் செய்வதும் அதிகாரத்தைப்பயன்படுத்தி அவர்களை சிறைகளுக்குள் தள்ளுவதும் எதிர்க்கட்சியினர் இதனைப் பிரசாரமாக்கி அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறியவுடன் தாமும் அதே வழியில் பயணிப்பதும் இலங்கை அரசியலில் எழுதப்படாத விதியாக அல்லது இதுதான் இலங்கை அரசியல் என்ற வகையில் மாறி மாறி வரும் அரசுகளினால் மாறாமல் முன்னெடுக்கப்படுகின்ற இந்த "உள்ளே... வெளியே..." அரசியல் விளையாட்டையே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கமும் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

மைத்திரி - ரணில் அரசு நல்லாட்சி என்ற பெயரில் கொடுங்கோல் ஆட்சி புரிந்து கடந்த ஆட்சியாளர்களான தங்கள் மீது அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுவதாகக் கூறியும் இன ,மதவாதங்களை பிரசார ஆயுதங்களாக்கியும் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்று 18 நவம்பர் 2019 இல் ஆட்சிபீடம் ஏறிய கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கமும் மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் இருந்தவர்களை சிறைகளுக்குள்ளே தள்ளிக்கொண்டு மைத்திரி - ரணில் அரசாங்கத்தால் உள்ளே தள்ளப்பட்ட தம்மவர்களை ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகளிலிருந்து வெளியே கொண்டு வந்தது.

இவ்வாறாக கோத்தபாய ராஜபக்ச அரசாங்கத்தினால் சிறைகளிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்ட மஹிந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாகவிருந்த, பிரியங்கர ஜயரட்ன, மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சராகவிருந்த சிவனேசத்துரை சந்திரகாந்தன் வடமத்திய மாகாண முதலமைச்சராகவிருந்த எஸ்.எம். ரஞ்சித், மைத்ரி - ரணில் அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த நளின் பெர்னாண்டோ ஆகியோர் தற்போதைய அநுரகுமார அரசாங்கத்தில் மீண்டும் கைதாகி குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் உள்ளனர்.

"கடந்த காலங்களில் நாட்டைக் சூறையாடிய அரசியல்வாதிகளைத் கூண்டில் ஏற்றுவோம். கடந்த கால ஊழல்கள் களையப்படும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்." என்ற வாக்குறுதிதான் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தியின் வாக்குப்பெட்டிகளை நிரப்பிக் கொடுத்து அரசாங்கம் அமைக்க உதவியது. இவ்வாறாக ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமது பிரதான வாக்குறுதியை நிறைவேற்றுவது போன்றே, முன்னாள் ஜனாதிபதி, எதிர்க்கட்சிகளின் மூத்த தலைவர்கள், முன்னாள் அமைச்சர்கள் அநுரகுமார அரசாங்கத்தினால் கைது செய்யப்படத் தொடங்கினர்.

எதிர்க்கட்சிகளின் முக்கிய அரசியல்வாதிகள் அடுத்தடுத்துக் கைது செய்யப்படும் செய்திகள் தலைப்புச் செய்திகளாகி மக்கள் மத்தியில் ஒருவித எதிர்பார்ப்பை, பரபரப்பை ஏற்படுத்தியபோதும் அந்தப் பரபரப்பின் சூடு தணிவதற்குள்ளேயே, கைது செய்யப்பட்டவர்கள் சில மணி நேரங்களிலேயே நீதிமன்றப் பிணையில் கம்பீரமாக வெளியேறும் காட்சிகள், "இது சட்டத்தின் பலவீனமா அல்லது ஊடகங்களுக்கான அரசியல் நாடகமா?" முன்னைய அரசாங்கங்களின் உள்ளே - வெளியே விளையாட்டை அநுரகுமார அரசாங்கமும் கையில் எடுத்துள்ளதா என்ற கேள்விகளை இயல்பாகவே எழுப்பியுள்ளது.

இலஞ்ச, ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகள் விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டு கைதாவதும் கைதாகி அடுத்த சில நிமிடங்களில் பிணை உத்தரவோடு கைகாட்டிச் செல்லும் நிலை தொடர்வதால் இலங்கை அரசியல் களம் ஒரு "உள்ளே வெளியே" விளையாட்டு மைதானமாக மாறியிருக்கிறது. ஒருபுறம் அரசாங்கம் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதாகக் காட்டிக்கொள்ள மேற்கொள்ளும் அவசரக் கைதுகள், மறுபுறம் போதிய சட்ட ஆதாரங்களின்றித் தொடரப்படும் வழக்குகளால் நீதிமன்றங்களில் அது பலவீனமடையும் நிலை. இவற்றுக்கு இடையே உண்மையான ஊழல் எதிர்ப்பு நடவடிக்கை ஊசலாடுகிறதா அல்லது இது எதிர்த்தரப்பை அச்சுறுத்தி, மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப அரங்கேற்றப்படும் அரசியல் விளையாட்டா என்ற கேள்விகளும் பலமாக எழுந்துள்ளன.

அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளின் கீழ் இதுவரைக்கும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் அமைச்சர்கள், எம்.பி.க்கள், உயர் அதிகாரிகள் எனப் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களில் பலர் பிணைகளில் வெளியில் சுதந்திரமாக நடமாடுகின்றனர். அந்த வகையில் ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க 2023 செப்டம்பரில் பிரித்தானியாவிற்கு மேற்கொண்ட தனிப்பட்ட பயணத்திற்காக 16.6 மில்லியன் அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி ஒரு சில தினங்கள் சிறையிலடைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று முன்னாள் நிதி அமைச்சரும் தற்போதைய எம்.பி.யுமான ரவி கருணாநாயக்க தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதியை தனது தனிப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கிய குற்றச்சாட்டில் கைதாகி அடுத்த மணித்தியாலமே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல போலி மருந்து இறக்குமதி ஊழல் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க புனித கல் திருட்டுக்கு உதவிய குற்றச்சாட்டுக்களில் கைதாவதும் பிணையில் விடுவிக்கப்படுவதுமாக உள்ளார். முன்னாள்பிரதி அமைச்சர் பிரசன்ன ரணவீர கிரிபத்கொடையில் பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட அரச காணியை சட்டவிரோதமாக விற்பனை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ளார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே 2021 இல் தரமற்ற சீன சேதனப் பசளை இறக்குமதி செய்து அரச நிதியை மோசடி செய்த குற்றச் சாட்டில் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அதேபோன்று முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுடன் இணைந்து அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரப் பொருட்களுக்கு செலவிட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் முதலமைச்சராக இருந்தபோது தனது தனி செயலாளருக்கு சட்டவிரோதமாக 2.68 மில்லியன் ரூபா அரச எரிபொருள் கொடுப்பனவு வழங்கிய குற்றச்சாட்டில் 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தனது அரசியல் ஆதரவாளர்களுக்கு உணவு வழங்குவதற்காக "ஸ்ரீலங்கன் கேட்டரிங்" நிறுவனத்திற்குச் சொந்தமான 330,000 ரூபா பணத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க ஊவா மாகாண சபையின் 23 மில்லியன் ரூபா நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தன தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக இருந்தபோது வாகனங்களை வாடகைக்கு எடுத்ததில் இடம்பெற்ற முறைகேடுகள் நிரூபிக்கப்பட்டு 16 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 1.5 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக்கு தப்பிச்சென்று விட்டார். முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) ஆட்கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கல்கிஸை பகுதியில் அமைந்துள்ள காணி தொடர்பான மோசடி, அச்சுறுத்தல் குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டு பின்னர் பிணை வழங்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டு, போதிய நேரடி ஆதாரங்கள் இன்மையால் நீதிமன்றத்தால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகன் யோசித ராஜபக்ச 2006 ஆம் ஆண்டு தகுதியற்ற முறையில் சட்டவிரோதமாக கடற்படையில் இணைந்தது மற்றும் பிரித்தானியாவின் டார்ட்மவுத் அரச கடற்படை அகடமியில் பயிற்சி பெறுவதற்காக 22 மில்லியனுக்கும் அதிகமான அரச நிதியை து்'பிரயோகம் செய்தமை. சட்டவிரோத காணி விற்பனை போன்ற குற்றச் சாட்டுக்களில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரது பாட்டியும் சட்டவிரோத காணி கொள்வனவு, விற்பனை தொடர்பில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக இருந்த ஷியாமிலா பெரேரா விதிகளை மீறி 3 பேருக்கு வேலை வழங்கி, அவர்களை ரவி கருணாநாயக்கவின் தனிப்பட்ட பணிகளுக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்ல போலி தடுப்பூசி இறக்குமதி ஊழல் தொடர்பில் சட்டவிரோதப் பணப் பரிவர்த்தனை மற்றும் சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் வெளியில் உள்ளார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# JJ Rental

## கதிரை மேசை வாடகைக்கு

**416.553.1540 | 647.960.1415**



உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள்,
பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின்
GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

**416.553.1540 | 647.960.1415**

# இவ்வார ராசிபலன்

## 11-09-2026 வெள்ளி தொடக்கம் 17-09-2026 வியாழன் வரையும்

**மேஷம்:** இந்த வாரம் உங்களுக்கு மிகவும் யோகமான வாரமாக அமையும். ராசிநாதன் செவ்வாய் மூன்றாம் இடத்தில் வலுப்பெறுவதால் தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும் லாபம் இரட்டிப்பாகும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு சம்பள உயர்வு கிடைக்கும் வெளிநாடு செல்லும் முயற்சி வெற்றியடையும். பணவரவு தாராளமாக இருக்கும் கடன் பிரச்சனைகள் தீரும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் பெருமை வரும். திருமண முயற்சிகள் கைகூடும் காதல் உறவில் இருந்த பிணக்கு நீங்கும். உடல்நலத்தில் சிறு தலைவலி சோர்வு வரலாம். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். போட்டிகளில் வெற்றி பெறுவர். மேலும் இந்த வாரம் புதிய நண்பர்கள் அறிமுகமாவர். பயணங்கள் லாபம் தரும். அரசு காரியங்கள் விரைவில் முடியும். தெய்வ வழிபாடு நன்மை தரும். முருகன் வழிபாடு மிகவும் சிறந்தது. பொறுமை அவசியம். எதிரிகள் விலகுவர். வழக்குகள் சாதகமாகும். புகழ் கௌரவம் உயரும். மனநிம்மதி கிடைக்கும். சந்தோ'ம் பெருகும். நன்மை நடக்கும். வெற்றி கிட்டும். பாராட்டு கிடைக்கும். மகிழ்ச்சி கூடும்.

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன். அதிர்ஷ்ட எண்: 9.
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு இந்த வார மதிப்பெண் 95%.

**ரிஷபம்:** இந்த வாரம் உங்களுக்கு சுக்கிரன் பலத்தால் சுபிட்சமான வாரமாக அமையும். தொழில் வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர் லாபம் அதிகரிக்கும் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வேலையில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் பாராட்டு கிடைக்கும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். சம்பள உயர்வு கிடைக்கும். பணவரவு தாராளமாக இருக்கும். சேமிப்பு உயரும். கடன் சுமை குறையும். தங்கம் நகை வீடு வாங்கும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுபச் செலவுகள் ஏற்படும் பெரியவர்கள் ஆசி கிடைக்கும். மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவி புரிதல் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் எதிர்பார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். காதல் வாழ்க்கை இனிமையாகும் திருமண பேச்சு கைகூடும். நட்பு வலுப்படும். உடல்நலத்தில் ஜீரண கோளாறு தலைவலி வரலாம். கார உணவை தவிர்க்கவும். நீர் அதிகம் பருகவும். ஓய்வு அவசியம். மாணவர்கள் கலைத்துறையில் சிறந்து விளங்குவர் பரிசு பெறுவர். வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். மேலும் பயணங்கள் லாபம் தரும். நண்பர்கள் உதவுவர். தெய்வ வழிபாடு நன்மை தரும். மகாலட்சுமி வழிபாடு சிறந்தது. பொறுமை அவசியம். வெற்றி நிச்சயம். புகழ் உயரும். மனநிம்மதி கிடைக்கும். சந்தோஷம் பெருகும். வெற்றி கிட்டும். பாராட்டு கிடைக்கும்.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி. திங்கள் அதிர்ஷ்ட எண்: 6.
அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. இந்த வார மதிப்பெண் 90%

**மிதுனம்:** இந்த வாரம் உங்களுக்கு புதிய நம்பிக்கையும் நல்ல முன்னேற்றமும் தரக்கூடிய வாரமாக அமையும். பணியிடத்தில் உங்கள் திறமை மற்றும் அனுபவம் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும். நீண்ட நாட்களாக தாமதமாக இருந்த வேலைகள் படிப்படியாக முடிவுக்கு வந்து மனநிம்மதி தரும். புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்பு இருப்பதால் தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய தொடர்புகள் உருவாகி லாபம் அதிகரிக்கும். பணவரவு சீராக இருந்தாலும் ஆடம்பரச் செலவுகளை கட்டுப்படுத்துவது அவசியம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். உறவினர்கள் மூலம் நல்ல செய்திகள் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் ஆதரவு உங்கள் மன உறுதியை அதிகரிக்கும். காதல் விஷயங்களில் அவசர முடிவுகளை தவிர்த்து பொறுமையுடன் பேசுவது நல்லது. மாணவர்கள் கவனச்சிதறலை தவிர்த்து படிப்பில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டால் சிறந்த வெற்றி பெறலாம். உடல்நலத்தில் சோர்வு, தூக்கக் குறைவு அல்லது சிறிய மன அழுத்தம் ஏற்படலாம் சரியான ஓய்வு அவசியம். பயணங்களில் கவனமாக இருங்கள். புதிய முதலீடுகள் மற்றும் முக்கிய முடிவுகளில் அனுபவமுள்ளவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள். நண்பர்கள் மூலம் எதிர்பாராத உதவி கிடைக்கும். தெய்வ வழிபாடு மன அமைதியையும் நல்ல அதிர்ஷ்டத்தையும் அதிகரிக்கும். இந்த வாரம் முயற்சிக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட எண்: 5.
அதிர்ஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி. வார மதிப்பெண்: 86%.

**கடகம்:** இந்த வாரம் உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களையும் முக்கியமான முடிவுகளையும் கொண்டு வரும் வாரமாக இருக்கும். ஆரம்பத்தில் சில காரியங்களில் தாமதம் ஏற்பட்டாலும் வாரத்தின் பிற்பகுதியில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பணியிடத்தில் பொறுமையுடன் செயல்படுவது மிக அவசியம். உங்கள் உழைப்பிற்கு உடனடியாக பாராட்டு கிடைக்காமல் போனாலும், பின்னர் அதன் முழுப் பலனையும் பெறுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் மூலம் நல்ல வருமானம் கிடைக்கலாம். பண விஷயங்களில் திட்டமிட்டு செயல்பட்டால் சேமிப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்த ஒரு குடும்பப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு காணப்படும் வாய்ப்பு உள்ளது. வாழ்க்கைத்துணையுடன் மனம் திறந்து பேசினால் உறவு மேலும் வலுப்படும். மாணவர்கள் இந்த வாரம் அதிக முயற்சி செய்தால் போட்டித் தேர்வுகளிலும் படிப்பிலும் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் உணவு மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மனதில் தேவையற்ற கவலைகளை வளர்க்காமல் தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. பயணங்களில் புதிய அனுபவங்களும் நல்ல தொடர்புகளும் கிடைக்கலாம்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 2.
அதிர்ஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன். வார மதிப்பெண்: 84%.

**சிம்மம்:** இந்த வாரம் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றியை நோக்கி முன்னேறக்கூடிய காலமாக அமையும். இதுவரை தாமதமாகிக் கொண்டிருந்த சில முக்கியமான முயற்சிகள் மீண்டும் வேகம் பெறும். வேலைப்பார்க்கும் இடத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பமும் அமையும். மேலதிகாரிகளுடன் தேவையற்ற கருத்து மோதல்களை தவிர்த்து, நிதானமாக பேசுவது நல்லது. தொழில் மற்றும் வியாபாரத்தில் பழைய முயற்சிகளுக்கான பலன் கிடைக்கத் தொடங்கும். புதிய வாடிக்கையாளர்கள் அல்லது முக்கியமான தொடர்புகள் மூலம் வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. பணத்தை கையாளும்போது அவசர முடிவுகளை தவிர்த்து சேமிப்புக்கு முக்கியத்துவம் கொடுங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெறலாம். வீட்டில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையுடன் சிறிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் விரைவில் சரியாகிவிடும். காதல் உறவில் இருப்பவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படுவது நல்லது. மாணவர்கள் கவனத்தை சிதறவிடாமல் படிப்பில் ஈடுபட்டால் நல்ல மதிப்பெண்களை பெற முடியும். உடல்நிலையில் சோர்வு ஏற்பட வாய்ப்புள்ளதால் போதுமான தூக்கமும் ஓய்வும் அவசியம். எதிர்பாராத பயணம் ஏற்படலாம். நண்பர்கள் மூலம் பயனுள்ள தகவல் கிடைக்கும். முக்கிய ஆவணங்களை கவனமாக கையாளுங்கள். தெய்வ வழிபாடு மன அமைதியை தரும்.

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1.
அதிர்ஷ்ட நாட்கள்: ஞாயிறு, வியாழன். வார மதிப்பெண்: 89%.

**கன்னி:** இந்த வாரம் திட்டமிட்டு செயல்பட்டால் நினைத்த காரியங்களை சாதிக்கக்கூடிய சிறப்பான காலமாக அமையும். கடந்த சில நாட்களாக மனதில் இருந்த குழப்பங்கள் விலகி, எதை முதலில் செய்ய வேண்டும் என்ற தெளிவு கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் பொறுப்புணர்வும் திறமையும் அனைவரையும் கவரும். புதிய வேலை வாய்ப்பு அல்லது பதவி தொடர்பான நல்ல தகவல் சிலருக்கு கிடைக்கலாம். தொழில் செய்பவர்கள் புதிய திட்டங்களை கவனமாக செயல்படுத்தினால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு இருந்தாலும் குடும்பத் தேவைகளுக்கான செலவுகளும் ஏற்படலாம். பணத்தை சேமிப்பதற்கு சரியான திட்டம் அமைப்பது நல்லது. குடும்பத்தில் உங்கள் கருத்துக்கு மதிப்பு அதிகரிக்கும். உறவினர்களுடன் இருந்த மனக்கசப்புகள் பேச்சுவார்த்தையின் மூலம் தீரும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு முக்கிய முடிவுகளில் துணையாக இருக்கும். மாணவர்கள் இந்த வாரம் கடினமான பாடங்களிலும் கூடுதல் கவனம் செலுத்தினால் சிறப்பான முன்னேற்றம் பெறுவார்கள். உடல்நலத்தில் செரிமானம் மற்றும் ஓய்வு விஷயங்களில் கவனம் தேவை. தேவையற்ற விமர்சனங்களை மனதில் எடுத்துக்கொள்ளாமல் அமைதியாக செயல்படுங்கள். திடீர் பயணம் அல்லது புதிய சந்திப்பு மூலம் நல்ல வாய்ப்பு உருவாகலாம். தெய்வ வழிபாடு மன உறுதியை அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்ட எண்: 5.
அதிர்ஷ்ட நாட்கள்: புதன், சனி. வார மதிப்பெண்: 88%.

**துலாம்:** இந்த வாரம் உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கத் தொடங்கும். இதுவரை தடைபட்டிருந்த காரியங்கள் ஒவ்வொன்றாக சாதகமாக நகரும். பணியிடத்தில் உங்களுடைய பேச்சுத்திறமையும் செயல்பாடும் பாராட்டப்படும். புதிய பொறுப்பு அல்லது முக்கியமான பணியை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கலாம். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பாராத புதிய தொடர்புகள் உருவாகி, அதன் மூலம் வருமானம் அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்பும் உள்ளது. பணவரவு இருந்தாலும் குடும்பத் தேவைகளுக்காக செலவுகள் ஏற்படும் என்பதால் திட்டமிடுவது நல்லது. குடும்பத்தில் நீண்ட நாட்களாக இருந்த மனக்கசப்பு குறைந்து ஒற்றுமை அதிகரிக்கும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்தி வரலாம். வாழ்க்கைத்துணையுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் பேச்சுவார்த்தை மூலம் சரியாகும். காதல் உறவில் இருப்பவர்கள் மனதில் இருப்பதை வெளிப்படையாக பேசுவது உறவை வலுப்படுத்தும். மாணவர்கள் போட்டி மற்றும் தேர்வுகளில் வெற்றிபெற கூடுதல் முயற்சி செய்ய வேண்டும். உடல்நிலையில் சோர்வு, தலைவலி போன்ற சிறிய தொந்தரவுகள் ஏற்படலாம் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். புதிய பொருட்கள் வாங்கும் யோகம் உள்ளது. பயணங்களில் சில நல்ல வாய்ப்புகள் கிடைக்கலாம். பிறர் பிரச்சினைகளில் தேவையின்றி தலையிடுவதை தவிர்க்கவும். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுங்கள். வெள்ளிக்கிழமை தெய்வ வழிபாடு செய்வது மனநிறைவை தரும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 6.
அதிர்ஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி. வார மதிப்பெண்: 87%.

**விருச்சிகம்:** இந்த வாரம் சவால்களை சமாளித்து வெற்றியை நோக்கி நகரக்கூடிய காலமாக அமையும். கடந்த காலத்தில் எடுத்த முயற்சிகளுக்கு இப்போது சாதகமான முடிவுகள் கிடைக்கத் தொடங்கும். பணியிடத்தில் உங்கள் பொறுப்புகள் அதிகரித்தாலும், அதற்கேற்ற அங்கீகாரமும் கிடைக்கும். மேலதிகாரிகளிடம் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் அவசியம். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். குறிப்பாக பழைய வாடிக்கையாளர்கள் அல்லது நண்பர்கள் மூலம் கிடைக்கும் தொடர்புகள் எதிர்காலத்தில் நல்ல வருமானத்திற்கு வழிவகுக்கும். பணவரவு சீராக இருக்கும் எதிர்பாராத செலவுகள் வரக்கூடும் என்பதால் தேவையற்ற ஆடம்பரங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வீட்டில் நடைபெறும் முக்கியமான நிகழ்வு மனதிற்கு சந்தோஷத்தை அளிக்கும். கணவன், மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். காதல் உறவில் இருப்பவர்கள் அவசரமாக முடிவெடுக்காமல் ஒருவருக்கொருவர் நேரம் கொடுங்கள். மாணவர்கள் கடினமாக உழைத்தால் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடையலாம். உடல்நிலையில் சோர்வு மற்றும் மன அழுத்தம் ஏற்படாமல் ஓய்வை கடைப்பிடிக்கவும். பயணங்களில் கவனம் தேவை. சொத்து தொடர்பான பேச்சுவார்த்தைகள் சாதகமாக நகரலாம். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உதவி கிடைக்கும். செவ்வாய்க்கிழமை முருகப்பெருமானை வழிபடுவது மனத்தெளிவை தரும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்ட எண்: 9.
அதிர்ஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன். வார மதிப்பெண்: 88%.

(தொடர்ச்சி 22 பக்கம்)


ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமான் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666

# ஈழத்துத் திருக்கோயில்கள்
## (வரலாறும் மரபும்)

---------------------------------------------
வரலாறும் மரபும்: **1213**
---------------------------------------------



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்
## புதுக்கல்லடி, மட்டக்களப்பு

கனவிலே முருகன் இட்ட பணியை மகிழ்வோடு ஏற்ற சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி, எவ்வாறாயினும் முருகனுக்கு அதே இடத்திலே கோயில் கட்ட எண்ணங் கொண்டார். சுவாமிகள் கனவு கண்ட தினம் சைவ சமயத்தவர்களுக்கு மிகவும் முக்கியமான மகாசிவராத்திரி தினமாகும். இவ்வாறான புனித நாளிலே முருகன் இட்ட பணியை நிறைவேற்ற வேண்டும். முருகன் அமர்ந்திருந்து காட்சி கொடுத்த அதே இடத்தில் முருகனுக்குரிய திருக்கோயில் கட்ட வேண்டும்.

ஆனால் ஒரு கோவிலைக் கட்டுவதென்பது இலகுவான காரியமல்ல. அதற்குப் பெரும் பணம் வேண்டும். ஆட்பலம் வேண்டும். கோவில் கட்டுவதற்குரிய காணி வேண்டும். ஆனால் முருகன் அவ்வாறான பெருங் கோயிலைக் கட்டும்படி சுவாமியிடம் கேட்கவில்லை. ஒரு சிறு கொட்டிலொன்றையே தனக்குக் கட்டும்படி கேட்டார். கொட்டிலைக் கட்டுவதென்றாலும், முருகனுடைய அடையாளமான வேல் ஒன்றினைச் செய்து நிறுவுவதென்றாலும் அதற்கும் சிலநாட்கள் வேண்டும். இவ்வாறான சிந்தனைகளோடு போராடிய சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி, இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

மன்னன் கட்டிய பெருங்கோவிலின் கும்பாபிஷேகத்திற்குச் செல்லாது, உள்ளத்திலே கோவில் எழுப்பிய பூசலார் நாயனாரின் ஆலய கும்பாபிஷேகத்திற்கு எழுந்தருளிக் கருணை மழை பொழிந்த, இறைவ-னின் பெருங்கருணையை யாரால் மறக்க முடியும்? இவ்வாறான கருணைப் பெருங்கதைகள் சுவாமின் கோவில் கட்டும் பெரும் பணிக்கு உறுதுணையாக இருந்தன.

காலையில் எழுந்து, தனது கடமைகளை முடித்த சுவாமி, ஆச்சிரமத்தை ஒருமுறை சுற்றி வந்தார். அங்கிருந்த கருங்கற்களில் ஒரு நல்ல கல்லைத் தேர்ந்தெடுத்தார். உளி, சுத்தியல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி மிகவும் பிரயத்தனப்பட்டு, பிள்ளையாருடைய வடிவத்தினை உருவாக்கினார். இப்பணி முடிந்ததும் கடைக்குச் சென்று கற்பூரம், ஊதுவத்தி, அபிஷேகச் சாமான்கள் மற்றும் வெற்றிலை, பாக்கு, பழங்கள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டார். ஆச்சிரமத்திலே நின்ற பூமரங்களில் பூக்களையும் பறித்துக் கொண்டார். இவற்றோடு ஆச்சிரமத்திலிருந்த சீமெந்து, மேசைக்கரண்டி, மட்டப்பலகை ஆகிய பொருட்களையும் எடுத்துக் கொண்டார்.

இப்பொருட்களோடு சுவாமி தான் உருவாக்கிய பிள்ளையாரையும் ஒரு பையிலே போட்டு துவிச்சக்கரவண்டியில் வைத்துக் கட்டினார். இப்பொருட்களையும் பிள்ளையாரையும் எடுத்துக்கொண்டு காலை ஒன்பது மணியளவில் தபோவனத்திற்குச் சென்றார்.

தபோவனம் கட்டிய ஆரம்ப காலமாத-லால், அங்கு ஒரு சிறு கல்லைக்கூட காண முடியவில்லை. மேடை அமைப்பதற்கு தேவையான பொருட்களுக்கு என்ன செய்வதென்று சற்றுநேரம் சிந்தித்தார், இறையருளால் அதற்கும் வழி பிறந்தது. துவிச்சக்கர வண்டியில் கொண்டு சென்ற பொருட்களையும், பிள்ளையாரையும் பத்திரமாக ஓரிடத்திலே வைத்துவிட்டு, அவை கொண்டு வந்த பையைத் தோளிலே போட்டுக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றார்.

கடற்கரையிலே நெடுநேரம் அலைந்து திரிந்து சில சல்லிக்கற்களைப் பொறுக்கிப் போட்டுக்கொண்டு, தபோவனத்திலுள்ள பனைமரத்தடியில் கனவிலே முருகன் காட்சிகொடுத்த இடத்திற்கு வந்தார். தான் கொண்டுவந்த பொருட்களைக்கொண்டு, முருகன் அமர்ந்திருந்த இடத்திலே ஒரு மேடையை அமைத்தார். அம்மேடையின் மத்தியில் சுவாமி உருவாக்கிய, வினை தீர்க்கும் விநாயகனை நிறுவி, முதல் வணக்கத்தை தெரிவித்துவிட்டு, அபிஷேகம், பூசை, அர்ச்சனை, தீபாராதனை, மந்திரஜெபம் என அனைத்தையும் செய்து, ஆத்மார்த்தமாக முருகனை நினைத்து வழிபட்டார். முருகன் இட்ட பணியை நிறைவேற்றிய மகிழ்ச்சியோடு, மீண்டும் ஆச்சிரமத்திற்குத் திரும்பினார். அன்றுமுதல் அப்பனைமரத்தடி ஒரு வழிபாட்டிடமாக மாறியது.

இவ்வழிபாட்டிடம் நிறுவப்பட்டு சுமார் ஒரு வருட காலத்தின்பின், கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள், 1966 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வருகை தந்தார். அப்போது மட்டக்களப்பிற்கும் சென்றிருந்தார். சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி நிறுவிய வழிபாட்டிடத்திற்கு வருமாறு அன்பர்கள் சிலர் அவரை அழைத்தனர். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார். கவியோகி அவர்களது வருகையைத்தொடர்ந்து, பனைமரத்தடியில் கொட்டில் கட்டி வேல் ஒன்றும் செய்யப்பட்டது. கவியோகி அவர்களோடு மேள தாள வாத்தியங்களோடு கூட்டுப் பிரார்த்தனை செய்தவாறு, வேலையும் ஊர்வலமாக பனைமரத்தடிக்குக் கொண்டு சென்றனர். ஓலைக்கொட்டிலில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருச்செந்தூர் முருகன் இட்ட பணியை ஏற்று அமைக்கப்பட்ட கோவிலாதலால், அன்றுமுதல் இக் கோயிலை, "ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்" என அழைத்தனர்.

சில ஆண்டுகளின் பின்பு இந்தியாவிலிருந்து வந்திருந்த சிதம்பரப்பிள்ளை என்ற சிற்பாச்சாரியாரைக் கொண்டு, திருச்செந்தூ ர் முருகனுடைய வடிவில் சிலை செய்யப்பட்டு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்திலே நிறுவப்பட்டது. **வளரும்..**

# IN LOVING MEMORY

*A natural leader, a brilliant mind, and a constant source of love, wisdom, and inspiration.*
*She will be deeply missed, forever loved, and never forgotten.*
அவர் விட்டுச் சென்றது நினைவுகள் மட்டும் அல்ல; நம்முள் தொடரும் நல்ல பழக்கங்களும் நற்பண்புகளும்.

Mangaleswary Nadarajah



September 11, 1931 - September 5, 2026

It is with deep sadness that we announce the passing of Mangaleswary Nadarajah.

Devoted daughter of late Ramalingam and Pooranam,
loving sister of late Yogeswary, Mathureswary, Suthanthira, and Nirmalan.

Beloved wife of late V.T. Nadarajah (Teacher), loving mother of late Gopiraj (Accountant),
late Maamanithar Raviraj (former Sri Lankan Member of Parliament, Lawyer), Inparaj (Entrepreneur), and Vasuki (Lawyer), and
loving mother-in-law of Vijayamalini, Sasikala (former Sectional Head, Bishop's College),
Sivaratha (Entrepreneur), and Devadas (Lawyer, Accountant).
Cherished grandmother of Rajkumar (Engineer), Rajprathab (Engineer), Praviinaa (Lawyer), Dr. Udishtran, Dr. Sivarajini, Dr. Sivani,
Deepana (Lawyer), Swadana, and Thanujan, and great-grandmother of Gypsie, Galexie, Ellis, Rhodes, Sahana, and Adhira.

Born in Karaveddy, Sri Lanka, resided in Chavakachcheri, Colombo, and Toronto, Canada,
a dedicated retired teacher of Drieberg College, Madduvil Maha Vidyalam, Vidyananda College Mulliyawalai,
and Vice-Principal at Chavakachcheri Ladies College.

She passed away peacefully on September 5, 2026, in Toronto, Ontario, Canada.
Mangaleswary will be remembered for her kindness, leadership, devotion to family,
resilience, strength, service to the community, faith, and warmth.
She will be deeply missed and forever remembered by family, friends, students, and all those whose lives she touched.

**VISITATION**
SATURDAY, SEPTEMBER 12, 2026
5:00 PM - 9:00 PM
SUNDAY, SEPTEMBER 13, 2026
9:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home
8911 Woodbine Avenue
Markham, ON L3R 5G1

**FUNERAL SERVICE**
SUNDAY, SEPTEMBER 13, 2026
11:00 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home
8911 Woodbine Avenue
Markham, ON L3R 5G1

**CREMATION**
SUNDAY, SEPTEMBER 13, 2026
1:30 PM
North Toronto Crematorium
2 Stalwart Industrial Drive
Gormley, ON

CONTACT: Vasuki Devadas (647-466-3382), Vina Devadas (416-875-1803), Nadarajah Inparaj (+44 7908 778316), Deepana Devadas (647-997-3382)

*May her soul rest in eternal peace*

# இவ்வார ராசிபலன்

( 20 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** இந்த வாரம் புதிய பாதையைத் திறக்கும் வாய்ப்புகள் நிறைந்ததாக இருக்கும். கடந்த சில காலமாக மனதில் வைத்திருந்த ஒரு முக்கியமான ஆசை அல்லது திட்டத்தை செயல்படுத்துவதற்கான சூழல் உருவாகும். வேலை செய்யும் இடத்தில் உங்கள் திறமையை நிரூபிக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும். பொறுப்புகள் அதிகரித்தாலும் அதற்கான அங்கீகாரமும் கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகளை தொடங்கலாம் குறிப்பாக வெளிநாடு அல்லது தொலைதூரத் தொடர்புகள் மூலம் நல்ல வாய்ப்புகள் கிடைக்கலாம். பணவரவு சீராக இருக்கும். எதிர்பாராத வரவு கிடைத்தாலும், உடனடியாக செலவு செய்வதை தவிர்த்து சேமிப்பில் கவனம் செலுத்துங்கள். குடும்பத்தில் சந்தோ'மான நிகழ்வுகள் நடைபெறலாம். நீண்ட நாட்களாக பேசாமல் இருந்த உறவினர் ஒருவருடன் மீண்டும் நல்ல தொடர்பு ஏற்படும். வாழ்க்கைத்துணையின் ஆதரவு முக்கியமான முடிவுகளில் உறுதுணையாக இருக்கும். காதல் வி'யங்களில் மகிழ்ச்சியான தருணங்கள் அமையும். மாணவர்கள் புதிய விஷயங்களை கற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற கடின உழைப்பு அவசியம். உடல்நிலையில் சோர்வு ஏற்படாமல் உணவு மற்றும் தூக்கத்தில் கவனம் செலுத்துங்கள். பயணங்களின்போது அவசரத்தை தவிர்க்கவும். சொத்து அல்லது முதலீடு தொடர்பான வி'யங்களில் நிதானமாக முடிவு எடுங்கள். நண்பர்கள் மூலம் எதிர்பாராத உதவி கிடைக்கும். வியாழக்கிழமை குரு வழிபாடு செய்வது மனநிறைவை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 3.*
*அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், ஞாயிறு. வார மதிப்பெண்: 90%.*




**மகரம்:** இந்த வாரம் பொறுமைக்கும் விடாமுயற்சிக்கும் நல்ல பலன் கிடைக்கும் காலமாக அமையும். ஆரம்பத்தில் சில பணிகள் எதிர்பார்த்த வேகத்தில் நகராமல் இருந்தாலும், வாரத்தின் நடுப்பகுதிக்குப் பிறகு சூழ்நிலைகள் உங்களுக்கு சாதகமாக மாறும். வேலை செய்யும் இடத்தில் புதிய பொறுப்புகள் வரலாம். உங்கள் அனுபவத்தால் சிக்கலான பணிகளையும் திறம்பட முடித்து மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பழைய வாடிக்கையாளர்கள் மூலம் வருமானம் அதிகரிக்கலாம். பணவரவு நன்றாக இருந்தாலும் குடும்பத் தேவைகள் மற்றும் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எனவே செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுவது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியான செய்தி வந்து மனநிறைவு தரும். வீட்டில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி அன்பும் புரிதலும் அதிகரிக்கும். காதல் உறவில் இருப்பவர்கள் எதிர்காலம் குறித்து முக்கியமான முடிவுகளை எடுக்கலாம். மாணவர்கள் சோம்பலைத் தவிர்த்து திட்டமிட்டு படித்தால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நிலையில் முதுகுவலி, மூட்டு சோர்வு போன்ற சிறிய பிரச்சினைகள் ஏற்படாமல் உடற்பயிற்சி மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். பயணங்களில் அவசரம் வேண்டாம். சொத்து தொடர்பான பேச்சுவார்த்தைகளில் சாதகமான முடிவு கிடைக்கலாம். சனிக்கிழமை எளிய தானம் செய்வது மனநிறைவை தரும்.

*அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எண்: 8.*
*அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். வார மதிப்பெண்: 88%.*




**கும்பம்:** இந்த வாரம் புதிய சிந்தனைகளும் எதிர்பாராத வாய்ப்புகளும் உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். இதுவரை தாமதமாகியிருந்த ஒரு முக்கியமான காரியம் மீண்டும் வேகம் பெறும். பணியிடத்தில் வழக்கமான பணிகளுடன் கூடுதல் பொறுப்புகள் வரலாம். ஆரம்பத்தில் சிரமமாகத் தோன்றினாலும், உங்கள் திறமையால் அவற்றை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பதுடன், எதிர்கால வளர்ச்சிக்கான முக்கியமான தொடர்புகளும் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பழைய கடன் அல்லது நிலுவைத் தொகையில் ஒரு பகுதி கிடைக்க வாய்ப்பு உள்ளது. அதே நேரத்தில் குடும்பச் செலவுகள் அதிகரிக்கக்கூடும் என்பதால் சிக்கனமாக செயல்படுங்கள். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தும். வாழ்க்கைத்துணையுடன் வெளிப்படையாக பேசுவது உறவை மேலும் வலுப்படுத்தும். காதல் உறவில் இருப்பவர்கள் எதிர்காலம் குறித்து நல்ல முடிவை எடுக்கலாம். மாணவர்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தி படித்தால் சிறப்பான முன்னேற்றம் கிடைக்கும். உடல்நிலையில் தூக்கமின்மை மற்றும் மனச்சோர்வை தவிர்க்க போதிய ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். நண்பர்கள் மூலம் பயனுள்ள தகவல் கிடைக்கும். புதிய முதலீடுகளில் அவசரம் வேண்டாம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன் முழுமையாக சரிபார்க்கவும். சனிக்கிழமை தெய்வ வழிபாடு செய்வது மனநிம்மதியை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்ட எண்: 8.*
*அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். வார மதிப்பெண்: 89%.*




**மீனம்:** இந்த வாரம் மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி, புதிய தெளிவுடன் செயல்படக்கூடிய காலமாக அமையும். கடந்த நாட்களில் தாமதமான சில முயற்சிகள் எதிர்பாராத வகையில் மீண்டும் முன்னேற்றம் பெறும். வேலை செய்யும் இடத்தில் உங்கள் ஆலோசனைக்கும் திறமைக்கும் மதிப்பு கிடைக்கும். புதிய பொறுப்பு வந்தாலும் அதை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டால் நல்ல பெயர் கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் பழைய முயற்சிகளின் மூலம் வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. புதிய கூட்டாண்மை அல்லது ஒப்பந்தம் தொடர்பாக பேசும்போது அனைத்து விஷயங்களையும் கவனமாக ஆராயுங்கள். பணவரவு ஓரளவு சிறப்பாக இருந்தாலும், குடும்பத் தேவைகளுக்காக செலவுகள் ஏற்படும். தேவையற்ற கடன் வாங்குவதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும். பெரியவர்களின் ஆதரவு முக்கியமான முடிவுகளில் கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் மனம் திறந்து பேசினால் புரிதல் மேலும் வலுப்படும். காதல் உறவில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கலாம். மாணவர்கள் நினைவாற்றலை பயன்படுத்தி திட்டமிட்டு படித்தால் நல்ல பலன் பெறுவார்கள். உடல்நிலையில் சோர்வு ஏற்படாமல் உணவு மற்றும் தூக்கத்தில் கவனம் செலுத்துங்கள். நீண்ட தூரப் பயணங்கள் மூலம் புதிய அனுபவம் கிடைக்கலாம். நண்பர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளும் முன் சிந்திப்பது நல்லது. வியாழக்கிழமை குரு வழிபாடு செய்து வருவது மனநிம்மதியை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 3.*
*அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி. வார மதிப்பெண்: 91%.*

*(continued from page 16)*

**English Translation:**

**With Passions as waves**
**We dance like the boat**
**In our passage of life**
**With the wind of youth**
**By flying in the chariot of love**
**Men and woman make merry enjoy**
**And surprise themselves**
**But who can guess tomorrow's path**
**Today itself?**

Kaviarasu Kanadasan through these poems trying to reinforce the theme "Sorrows are credit of life while the joys are debit, with the balance being mere dreams, and who can comprehend the arithmetic of fate".

**CONCLUSION:**

Kaviarasu Kannadasan is a great accomplisher, having written more than 10,000 songs. Apart from film songs he has written devotional songs, poems, articles, short stories, novels, biographies etc. Totaling around 10,000 poems. Kaviarasu Kannadasan had the integrity and courage to share his views with others. We all should read his books and poems.

They are treasures in the sense that they will clarify all our philosophical doubts and render clarity and calmness of mind. Kaviarasue Kannadasan came to America in July 1981 to participate in the function organized by Tamil Sangam and in the Poet's conference there, he suddenly developed chest pain and was admitted to a hospital in Chicago town on 24th July 1981 and was given treatment. But he did not respond to the treatment and died on 17th October 1981. He was only 56 years when he died. His body was brought to Chennai with the help of then chief minister MGR and was cremated the next day.


Today, he is not physically presence, but his philosophical writings will stand the test of time and will remain forever in the hearts of the Tamils all over the world. His works prove his words, "I am permanent, I have no death at any point in time". Though Kaviarasu Kannadasam is no more his song writing and his famous cinema and other poems remain in hearts and minds of his fans and Tamils all over the world. As he mentioned, He is permanent, and he has no death through his eternal Tamil songs and philosophical writings. His publications and poems will amply testify to that. And I also add that Kaviarasu Kannadasan was a distinguished philosopher in his own right and a thinker possessed of powerful mind. He has also a great understanding of Hinduism, philosophical issues from a classical Tamil perspective which I have rarely seen matched. Particularly, his ten parts on Hinduism (Arthamulla Indu Matham). He is one of the kinds of poet who are proficient in Classical Tamil and philosophy in our recent Tamil poets. And, most of all he is a wise man.

*Special Article for his 100th Years Birthday celebration.*



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416-752-1524


29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1588 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 11, 2026

# ஜனாதிபதி அநுர குமார தலைமையில் கொழும்பில் நடைபெற்ற "அரச இலக்கிய விருது விழா"!

## தமிழ் மொழிப் பிரிவில் கவிஞர் (சோ.பா) சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் ஜனாதிபதியிடமிருந்து விருதைப் பெற்றுக்கொண்டார்!



இலங்கை இலக்கியத் துறையைத் தமது உன்னதமான படைப்புகளால் வளப்படுத்திய இலக்கியவாதிகளைக் கௌரவிக்கும் அரச இலக்கிய விருது விழா 2026, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் 8ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை இலக்கியத் துறைக்கு உன்னதமான சேவையாற்றியமைக்காக, உயரிய "சாஹித்யரத்ன" கௌரவ விருதுகள் மூன்று மொழிப் படைப்பாளிகளுக்கு ஜனாதிபதியால் வழங்கிவைக்கப்பட்டன. அவர்களில் சிங்கள மொழிப் பிரிவில் பராக்கிரம கொடித்துவக்குக்கும், தமிழ் மொழிப் பிரிவில் கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதனுக்கும், ஆங்கில மொழிப் பிரிவில் பேராசிரியர் ஈ. ஏ. காமினி பொன்சேகாவுக்கும் மேற்படி விருதுகள் வழங்கப்பட்டன.
(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தில் ஐபிசி ஊடக குழுமத்தின் தலைவரும் தொழிலதிபருமான பாஸ்கரன் கந்தையாவை சந்தித்த புலம்பெயர் தமிழ் வர்த்தக முன்னோடிகள் மூவர்!

அண்மையில் தாயகம் சென்றிருந்த கனடா மற்றும் சுவிட்சலாந்து வாழ் தமிழ் வர்த்தக முன்னோடிகள் மூவரான சங்கர் நல்லதம்பி (கனடா), சுகந்தன் (கனடா மற்றும் தாயகம்) மற்றும் ஸ்ரீ இராசமாணிக்கம் (சுவிஸ்லாந்து) ஆகியோர் யாழ்ப்பாணத்தில் ஐபிசி ஊடக குழுமத்தின் தலைவரும் தொழிலதிபருமான பாஸ்கரன் கந்தையா அவர்களைச் சந்தித்து இருபக்க வர்த்தக வாய்ப்புக்கள் மற்றும் மூதலிடுகள் தொடர்பாக நட்புரீதியாக உரையாடினர்.

அவரது யாழ்ப்பாண இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பாஸ்கரன் கந்தையா அவர்கள் தனது முதலீடுகளின் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்கக் கூடியதாக உள்ளது என்பதையும் பகிர்ந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.






# எதிர்வரும் ரொறன்ரோ நகரசபைக்கான தேர்தலில் ஸ்காபுறோ வடக்கு 23ம் வட்டாரத்தில் போட்டியிடும் திருமதி பிரவீனா சத்தியானந்தம்



எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ள ரொறன்ரோ நகரசபைக்கான தேர்தலில் ஸ்காபுறோ வடக்கு 23ம் வட்டாரத்தில் போட்டியிடும் திருமதி பிரவீனா சத்தியானந்தம் தனக்கு ஆதரவை வழங்குமாறு வாக்காளர் மத்தியில் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளார்.

இவரது வெற்றிக்காக பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்திப்பதிலும் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதிலும் ஈடுபட் டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அநியாயத்திற்கு "நல்லவரான" அர்ச்சுனா, எம்.பி.பதவியிலிருந்து விலகுவாரா? அல்லது விலக்கப்படுவாரா?



"யாழ்ப்பாணம் தென்மராட்சி மக்களின் முட்டாள்தனத்தினால் தமிழ் தேசிய அரசியலில் கடந்த 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் மூலம் ஒரு ""புதுவடிவமாக"" உருவெடுத்து இன்று தமிழ் தேசிய அரசியலையே நாறடித்துக் கொண்டும் தமிழினத்தையே தலைகுனிய வைத்துகொண்டுமிருக்கும் இந்த அர்ச்சுனா இராமநாதன் என்னும் அரசியல்(வாந்தி)வாதி தற்போது ஒரு சட்ட சிக்கலில் மாட்டியுள்ளார். "நீதிமன்றத் தீர்ப்பினால் தனது எம்.பி. பதவி பறிபோவது உறுதி என்ற நிதர்சனம் புரிந்ததும்,""நானே எம்.பி.பதவியிலிருந்து இராஜிநாமா செய்யப்போகின்றேன் " என பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் அறிவிக்கும் அவர். மறுபுறம் "எம்.பி.பதவியைக் காப்பாற்ற வழக்காடப் பணம் தாருங்கள்" என புலம் பெயர் தமிழர்களிடம் கேட்கின்றார். எம்.பி பதவியிலிருந்து விலகப்போவதாக அறிவிக்கும் ஒருவருக்கு வழக்காட எதற்குப் புலம்பெயர் தமிழரின் பணம்?

-----கே.பாலா

(தொடர்ச்சி 15ம் பக்கம்)